# PHOTONTECH



175, Main Street
Trincomalee
075 6602486



அறைவு 02 இயம் 47 July 19 - 25, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்





CCTV Installation & Maintenance

PHOTONTECH

175, Main Street
Trincomalee



075 6602486


# நம்பிக்கையில்லாப் பிரேரணை

## இல்லை.....

### தவிசாளருக்கு எதிராக எப் பிரேரணையும் முன்வைக்கப்படவில்லை



இம்மாதம் கூடிய கிழக்கு மாகாண சபையின் அமர்வுகளில் தவிசாளருக்கு எதிராக எந்தவொரு பிரேரணையும் முன்வைக்கப்படவில்லை.

கடந்த மாத அமர்வுகளில் பேருவளையில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களுக்குக் கண்டனத் தீர்மானமொன்றைக் கொண்டுவர முஸ்லிம் காங்கிரஸ் முயன்ற வேளை அதற்கு அனுமதியளிக்காமல் மாகாண சபை அமர்வுகளை தவிசாளர் ஒத்திவைத்திருந்தார்.

தவிசாளரின் இத்தகைய தன்னிச்சையான முடிவினை எதிர்த்து முஸ்லிம் காங்கிரஸ், ஏனைய கட்சிகளினையும் திரட்டிக்கொண்டு.........

13

# ஆலடி விநாயகர் கும்பாபிசேகம்



(படங்கள் அச்சுதன்)

## எண்ணைக்காப்பு சாத்த வந்து ஏக்கமாய் திரும்பிய மக்கள்

திருகோணமலை ஆலடி வினாயகர் ஆலய கும்பாபிசேகத்தின் போது எண்ணைக்காப்பு சாத்த வந்த அடியவர்களிற் சிலர் போதிய நிதிவசதியின்மையால் அந் நேர்த்திக் கடனை நிறைவேற்ற முடியாமல் திரும்பிச்சென்ற சம்பவம் நடைபெற்றுள்ளது.

பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு முன்புறமாகவுள்ள வினாயகர் ஆலயத்தின் கும்பாபிசேகத்திற்கு முன்னைய நாட்களில்....

13



கும்பாபிசேகத்தில் கலந்து கொண்ட த.தே.கூவின் தலைவரும் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.சம்பந்தன் அவர்கள்

# "முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தலாம்"

## "தயான் ஜெயதிலக்க"





தம்மீது நடைபெறும் தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் தாங்கலாம் என இலங்கையின் இராசதந்திரியும் ஆய்வாளருமான தயான் ஜெயத்திலக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 17ம் தகதி பைனான்சியல் டைம்ஸ் இணையத்தில் "இலங்கைக்கான உண்மையான ஆபத்து முஸ்லிம்களின் எழுச்சியா அல்லது முஸ்லிம்களுக்கு எதிரான அமைப்புக்களின் எழுச்சியா" என்ற தலைப்பில் தனது பதிவையிட்டுள்ள தயான் முஸ்லிம்களுக்கு எதிரான எழுச்சியினால் கிழக்கின் முஸ்லிம்கள் தமிழ்தேசியவாதிகளின் கைகளில் விழுந்துவிடும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

13

# கடத்தப்பட்ட குழந்தை கைவிடப்பட்ட நிலையில் மீட்பு



(உதயா)

திருகோணமலை மட்கோ பிரதேசத்தில் கடந்த வாரம் கடத்தப்பட்டுக் காணாமற் போயிருந்த 14 மாதங்களேயான குழந்தை கைவிடப்பட்ட நிலையில் பெற்றோரால் மீட்கப்பட்டுள்ளது. கடந்த 09ம் திகதி நடைபெற்ற இக் கடத்தல் சம்பவத்தில் மற்கோ முகம்மதியா நகர் பகுதியில் வசிக்கும்

13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

## காலம் கடந்து கிடைக்கும் நீதி நீதியா?

காலம் கடந்த கண்டனத் தீர்மானமொன்றை நிறைவேற்றிவிட்டு ஆசுவாசமாக இருக்கின்றது கிழக்கின் மாகாண சபை.

கிழக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தை அதன் இரண்டாவது காலப் பகுதியில் கைப்பற்றிக்கொண்ட பேரினவாத அரசதரப்பும் முஸ்லிம் தரப்பும் தம்மிடையேயான உடன்பாட்டின் படி மாகாண சபையை நிர்வகித்து வருகின்றன.

எனினும் பொதுக் கொள்கைக்கு எதிராக பேரினவாத அரச தரப்பால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை எதிர்க்கத் திராணியற்றே கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைத்துள்ள முஸ்லிம் தரப்பு செயற்படுவது உட்கிடையாகவே பல காலங்கலாக இருந்து வந்தது.

விசேடமாகக் கிழக்கு வாழ் தமிழ்மக்களின் உரிமைகள் மீறப்படுகின்ற போது அதனையிட்டு மௌனம் சாதித்த முஸ்லிம் தரப்பின் பலவீனத்தைச் சரியாக அக்கணங்களில் மதிப்பிட்டுக் கொண்டது பேரினவாத அரச தரப்பு.

பொதுக்கொள்கைக்கு எதிராக பேருவளையில், திட்டமிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான தாக்குதல்களை அடுத்து உலகம் முழுவதுமே அத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்தது.

ஆனால் இத்தாக்குதல்களுக்கு எதிராக இலங்கையில் அதிகாரத்திலுள்ள ஒன்பது மாகாண சபைகளில் எட்டு மாகாண சபைகள் மௌனம் காத்தன.

பொதுக்கொள்கைக்கு எதிராக நடத்தப்பட்ட இத் திட்டமிட்ட தாக்குதலின் போது பலியான மூன்று அப்பாவிகளும், பல மில்லியன் சொத்துக்களை இழந்து நடுத்தெருவில் நின்ற மக்களும் இந்நாட்டவரில்லை என்ற நினைப்பிலேயே நடந்தவற்றை பார்வையாளர்களாக நின்று பார்த்துக்கொண்டிருந்தன எட்டு மாகாண சபைகள். அவற்றுள் ஏழு மாகாண சபைகள் சிங்களவரின் ஆட்சிப்பிடியில் இருக்கின்றன. எஞ்சிய இரண்டிலும் வடமாகாண சபை தமிழரின் தனிக்கட்டுப்பாட்டில் இருக்க கிழக்கு மாகாண சபையானது முஸ்லிம்களின் பரஸ்பர விட்டுக்கொடுப்புடன் பேரினவாதிகளின் கைகளில் இருக்கின்றது

அதில் கேலிக்குரிய விடயம் யாதெனில் தமது சொந்த இனத்தவர்கள் பலியிடப்பட்டு சொத்துக்களை இழந்து தெருவில் நின்றதற்கு எதிராக ஒரு அவசர பிரேரணையைக்கூட முன்மொழிய கிழக்கில் முஸ்லிம்கள் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் வடமாகாண சபை தனது தார்மீகக் கடமையைக் கருத்திற்கொண்டு இத் தாக்குதலை வன்மையாகக் கண்டித்திருந்தது.

கிழக்கு மாகாணசபையில் ஒரு அவசர பிரேரணையைக் கொண்டுவர முடியாத நிலையை எவ்வாறு அதன் தவிசாளர் கையாண்டார் என்பதனை நோக்கினால் அதே அணுகுமுறையைத்தான் முன்னொரு சந்தர்ப்பத்தில் அவர் தமிழ்ப்பிரதிநிதிகள் கொண்டுவர விரும்பிய பிரேரணையொன்றின் மீதும் மேற்கொண்டிருந்தார் என்பது புலனாகியது.

அன்று அமைதிகாத்த முஸ்லிம் தரப்புக்களால் அதே அணுகுமுறை தம்மீதும் பிரயோகிக்கப்பட்டபோது ஒன்றுமே செய்யமுடியாது போனது. காலங்கடந்து அப் பிரேரணையை நிறைவேற்றியுள்ளது சபை.

"காலம் கடந்து கிடைக்கும் நீதி நீதியல்ல" என்றோர் முதுமொழியுண்டு. காலங்கடந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் அதேதான்.

நீதி மறுக்கப்பட்டது என்பதை மக்களே புரிந்துகொள்ள வேண்டும்.....

## திருமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்க 10வது ஆண்டு விழா

(ஏ.எல்.றபாய்தின்பாபு)

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவும் ஊடக விருது வழங்கும் நிகழ்வு 12ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30. மணியலவில் உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி மண்டபத்தில் வடமலை ராஜ்குமார் தலைமையில் மிகச் சிறப்பாக நடை பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண விதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை பிரதம அதிதியாகவும் விசேட அதிதியாக கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் ஆரியவத்தி கலப்பத்தி, கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் எஸ்.தண்டாயுதபாணி .ஐ.தே.க.மாகாண சபையின் உறுப்பினர் இம்ரான் மஹ்ருப் மாகாண சபை உறுப்பினரகளான திரு பிரியந்த பத்திரன .திரு நாகேஸ்வரன் . திருகோணமலை நகர முதல்வர் கே.செல்வராசா மூதூர் தவிசாளர் எம்.ஹரிஸ் பிரதேச சபை உறுப்பினரகளான வி.கலைச்செல்வன் ஜென். நந்த குமார் மற்றும் வெருகல் பட்டணமும் சூழல் பிரதேச சபைத் தலைவர்கள் கிழக்கு பல்கலைக் கழக வளாக முதல்வர் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பல்வேறு கால கட்டங்களில் ஊடகப்பணியாற்றியவர்கள் நான்கு வகையாக தரப்படுத்தல் முறையில் பிரிக்கப்பட்டு ஊடகவிருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.. மூத்த ஊடகவியலாளர்கள் 5 பேர் சிரேட்ட ஊடகவியலாளர்கள் 21 பேர் கனிட்ட ஊடகவியலாளர்கள் 24 பேர் இளம் ஊடகியலாளர்கள் 5 பேர் என கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.










## திருமலை – யாழ் அரசுசாரா நிறுவனங்கள் சந்திப்பு

திருக்கோணமலை அரசசாரா நிறுவனங்களின் ஒன்றியம் மற்றும் யாழ் அரசசாரா நிறுவனங்களின் ஒன்றியம் என்பவற்றின் ஏற்பாட்டின் கீழ் நடைபெற்ற இவ் அனுபவ பகிர்வு கலந்துயைாடல் இன்று 14.07.15 (திங்கள்) அன்று திருக்கோணமலை ரோட்ட்ரிக் கழக ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

குறிப்பாக இரு மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் சிறு குழுக்களின் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள், வாழ்வாதார மற்றும் வருமானமீட்டல் தொடர்பான திட்ட நடவடிக்கைகள் என்பவற்றுடன் அரசசாரா நிறுவனங்களின் கடந்த கால, தற்போதைய பொதுவான அபிவிருத்தி செயற்பாடுகள் அதன் மாவட்ட நிலமைகள் பற்றியதாக இக்கலந்துரையாடல் அமைந்தது.

திருக்கோணமலை அரசசாரா நிறுவனங்களின் ஒன்றியத்தின் தலைவர் திரு.தவசிலிங்கம் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் யாழ்.திருமலை மாவட்டங்களைச் சேர்ந்த 15 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்குபற்றியிருந்தனர்.

(கலாரதன்)

## சமயங்களை மதிக்கத்தெரியாத அரசு வழிதவறிச் செல்கின்றது

### இம்ரான் மஹ்ரூப்



எந்தச் சமயத்தையும் மதிக்கும் பண்பு இந்த அரசாங்கத்தில் இல்லை. இதனால் அரசாங்கம் பல வழிகளில் வழிதவறிச் சென்று கொண்டிருக்கிறது என கிழக்கு மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை அளுத்கம, பேருவளைப் பகுதிகளுக்கு விஜயம் செய்த இவர் அங்கு இடம்பெற்ற மக்கள் சந்திப்புகளின்போது இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:

ஒரு மனிதனை நேர்வழியில் இட்டுச் செல்வதற்கு சமயங்கள் வழிகாட்டுகின்றன. எனவே, சமய ஈடுபாடுள்ள ஒரு மனிதன் ஒருபோதும் வழிதவறமாட்டான். ஆனால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை அது சமயங்களைப் பறக்கணித்துச் செயற்படுகின்றது. இந்நிலையில் இந்த அரசு நேர்மையாகச் செயற்படும் என எப்படி எதிர்பார்க்க முடியும். சமயங்களுக்கு மதிப்பில்லாத ஒரு ஆட்சியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இது வேதனைக்குரிய விடயமாகும். நிலைமை இப்படியே நீடிக்குமானால் எப்படி நாம் நீதி நியாயத்தை எதிர்பார்க்க முடியும். ஒழுக்கம், பண்பாடு எல்லாம் சீரழிந்து கொண்டிருக்கின்றன. நமது எதிர்கால சந்ததியினரின் நிலையை எண்ணிப் பாருங்கள்.

சமயங்களுக்கு மதிப்பில்லாத ஒரு ஆட்சியிலநாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது வேதனைக்குரிய விடயமாகும். நிலைமை இப்படியே நீடிக்குமானால் எப்படி நாம் நீதி நியாயத்தை எதிர்பார்க்க முடியும். ஒழுக்கம், பண்பாடு எல்லாம் சீழிந்து கொண்டிருக்கின்றன. நமது எதிர்கால சந்ததியினரின் நிலையை எண்ணிப் பாருங்கள். எனவே, இந்த ஆட்சியை மாற்றுவதற்கு ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூண வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். இது அனைவர் மீதுமுள்ள தார்மீகக் கடமையாகும் என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம.ரா. இந்தியாவிற்கு எதிராக எறியும் துருப்புச்சீட்டு

**ஆங்கில மூலம்: உபுல் ஜோசப் பெர்ணாண்டோ**

**தமிழில் மாயன்**

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சிவராஜ் உடன் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் இந்திாவில் பேசிக்கொண்டிருக்கும் போதே இலங்கையின் சனாதிபதி மஹிந்த ராசபக்ச வடமாகாண ஆளுனரான இராணுவ அதிகாரிக்கு சேவை நீடிப்பை வழங்கியுள்ளார்.

ஆரம்பம் முதலே வடமாகாண ஆளனராக இராணுவ முன்னாள் அதிகாரிணை நிமிப்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அதன் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் மட்டுமன்றி காங்கிரஸ் தலைமையிலான முன்னாள் இந்திய அரசும் வட ஆளுனராக மேஜர் ஜெனரல் சந்திரசிறி நியமிக்கப்படுவதை எதிர்த்திருந்தனர்.

வட ஆளுனராக இராணுவ அதிகாரியை நீக்கிவிட்டு நிர்வாகத் தரத்திலுள்ள அதிகாரியை நியமிக்கும் படி மேற்சொன்ன தரப்புக்கள் கோரிக்கைகளையும் விடுத்திருந்தன.

அவ்வாறு நிர்வாக அதிகாரியொருவரை நியமிப்பது சனாதிபதிக்கு ஒன்றும் கடினமான விடயமாக இருக்கவில்லை.



ஏனெனில் அவரது ஆட்சியில் பங்கு போட்டிருந்த பங்காளிக் கட்சிகள் பலவும் இத்தீர்மானத்தை ஆதரித்திருந்தன.

ஆனால் சனாதிபதி இந்தியாவிற்கோ அல்லது த.தே.கூ விற்கோ தலைசாய்ப்பதாக இல்லை. தனது முடிவை அவர் மேற்கொண்ட போது சுஷ்மா சிவ்ராஜ் உடன் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் இந்தியாவில் பேசிக்கொண்டிருந்தார். சுஷ்மாவிற்கு இலங்கைத்தமிழரின் பிரச்சனைகள் தொடர்பாகவும், வடமாகாண ஆளுனர் தொடர்புாகவும் நன்றாகத் தெரியும். ஏனெனில் அவரது கட்சி இந்தியாவில் எதிர்க்கட்சியாக இருந்த போது அவரது தலைமையில் அவர் இலங்கைக்காண விபரம் கண்டறியும் பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இலங்கையின் சனாதிபதி தனது தீர்மானத்தை மாற்ற விரும்பாமல் பிடிவாதமாக இருந்தபோது இந்தியாவில் நடைபெற்றுக்கொண்டிருந்த பேச்சுக்களில் வித்தியாசமான பரிசொன்றை இலங்கைக்கு வழங்கினார் சுஷ்மா!!!!!

அப்பரிசு யாதெனில் ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழ முன்னெடுக்கவுள்ள இலங்கைக்கு எதிரான விசாரணைகளுக்கு இந்தியா ஆதரவளிக்கப் போவதில்லை என்பதே அந்தப்பரிசாக இருந்தது. அத்துடன் எப்போதுமே இலங்கைக்கு எதிராக விசாரணைகள் ஏதும் ஐ.நாவில் முன்னெடுக்கப்பட்டு வாக்களிப்பிற்கு விடப்படுமானால் அவ்வாக்களிப்பில் இந்தியா கலந்துகொள்ளாது என்ற உறுதிப்பாடும் சுஷ்மாவினால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உத்தரவாதங்களால் அமெரிக்காவினதும் அதன் நேசநாடுகளினதும் முகத்தில் அறையொன்றை விட்டுள்ளதாகவே இலங்கையின் சனாதிபதி எண்ணியுள்ளார். அத்துடன் ராசபக்சவின் நடவடிக்கைகளால் மோடி அரசு சினமடைந்துள்ளது என்ற இலங்கை எதிர்கட்சிகளின் கனவுகளில் அவர் மண்தூவிச் சென்றுள்ளார்.

இந்த உறுதிகளைப் பெற்றுக்கொள்ளும் வேளையில்தான் வடமாகாண ஆளுனரின் நியமனத்தை சனாதிபதி வழங்கியுள்ளார். அதன் கருத்து யாதெனில் தற்போதைக்கு இந்திய அரசு இவ்விடயத்தையோ 13யோ பெரிசுபடுத்தப் போவதில்லை என்பதை அவர் அறிந்திருப்பதாலேயே!!!!

மோடியின் பதவியேற்பில் இலங்கை சனாதிபதியுடன் பேசப்பட்ட முக்கிய விடயம் இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பானதாகவே இருந்தது.

இலங்கையில் உள்ள பாகிஸ்தானியரால் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல் தொடர்பாக மோடியின் கவனம் குவிந்துள்ளதை அறிந்துகொண்ட சனாதிபதி நாடு திரும்பியதும் அதனைத் தனது துருப்புச்சீட்டாகப் எடுத்துக்கொண்டார்.



காங்கிரஸ் கால ஆட்சியில் சீனத்துரம்பை ஆடிய சனாதிபதி மோடிக்கான துரும்பாக இதனை ஆடுகின்றார் போலவே உள்ளது.

ஏனெனில் இலங்கைக்குத் திரும்பியதுமே இலங்கையில் அகதி அந்தஸ்த்தை ஐ.நாவின் அகதிகளுக்கான பேரவை ஊடாகக் கோரியிருந்த பாகிஸ்தானியரை நாடு கடத்தும் நடவடிக்கைகளை சனாதிபதி முன்னெடுத்தார். அதற்கும் அப்பாலும் சென்னு இந்தியாவை உளவு பார்க்கின்றார் என்று சந்தேகப்பார்வைக்குள் சிக்கிக்கொண்ட இலங்கையிலுள்ள பாகிஸ்தானியத் தூதரக அதிகாரியொருவரை நாடு கடத்தும் முடிவையும் சனாதிபதி அறிவித்தார். இவ்வறிவிப்பால் பாகிஸ்தானுடன் இலங்கை கொண்டிருந்த நெருக்கமான நட்பு கேள்விக்குரியதாயிற்று.

இவற்றின் ஊடாக மோடியின் அரசைக் கொஞ்சகாலம் தானும் தனது விருப்பத்திற்கு ஆடவைக்க முடியும் என சனாதிபதி நனைத்திருக்கலாம்.

அதற்கு மேலும் வலுச்சோப்பதற்காக மோடியின் பின்புலமான சிவசேனாவை இலங்கையில் நிகழ்த்தப்ட்ட முஸ்லிகம்களின் மீதான தாக்குதல்களின் ஊடாக மனங்குளிரவைக்கலாம் என அவர் எண்ணியிருக்கலாம்.

ஏனெனில் சிவசேனாவைக் குளிர்விப்பதென்பது மோடியைக் குளிர்விப்பதற்குச் சமமோ என்னவோ!!!!!.

# பிறிக்ஸ் வங்கியின் உதயம்




பிரேசில்,இந்தியா,ரஸ்யா,சீனா தென்னாபிரிக்க ஆகிய நாடுகள் இணைந்த கூட்டை பிரிக்ஸ் (டீசுஐஊளு) என்று அழைக்கிறர்கள்.இந்த நாடுகள் ஒன்றிணைந்து உலக வங்கியை மாதிரியாக முன்வைத்து பிரிக்ஸ் வங்கியை உருவாக்கியுள்ளன. 100 பில்லியன் டொலர் முதலீட்டில் தோற்றுவிக்கப்பட்ட இந்த வங்கியில் முதலிடப்படும் பணத்தை இந்த நாடுகள் அனைத்தும் பகிர்ந்துகொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரேசிலில் நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகளின் உச்சி மாநாட்டில் தனி மூலதனத்துடன் பிரிக்ஸ் வங்கியை ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

தென்னாபிரிக்க ஜனாதிபதி டில்மா ரௌசெப் வங்கி ஆரம்பிக்கப்படுவதை அறிவித்தார். வங்கியின் தலைமையகம் சீனாவில் ஸெங்காய் பகுதியில் ஆரம்பிக்கப்படும் எனவும் அதன் முதலாவது தலைவராக இந்தியாவைச் சேர்ந்த ஒருவரை நியமிப்பது எனவும்

## ஆசிய ஆதிக்க வெறியின் அடுத்த கட்டமா? அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்புத் திட்டமா?

எனத் தீர்மானிக்கப்பட்டது.

வங்கியில் இருப்பில் வைக்கப்படும் மேலதிக 100 பில்லியன் டொலர்கள் அவசர நிதித் தொகையாக வறிய நாடுகளுக்கு வழங்கப்படும் எனத் தீர்மானிக்க்ப்பட்டது. உலக வங்கி மற்றும் உலக நாணய நிதியம் ஆகியவை இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டன. அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள் உலகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இவை ஆரம்பிக்கப்பட்டன. இந்த அமைப்புக்களின் ஆதிக்கத்தால் பல நாடுகள் வறுமையின் விழிம்புக்குள் இழுத்துவரப்பட்டன. போர்களும் அழிவுகளும் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டன. உலக வங்கியும் உலக நாணய நிதியமும் இன்று வலுவிழந்து வரும் நிலையில், உலகைக் கூறுபோட்டுக்கொள்ள புதிதாக முளைத்திருக்கும் பிரிக்ஸ் பல்தேசிய வியாபார நிறுவனங்களின் நேரடி முகவராகச் செயற்படும். உலகம் முழுவதும் பல்தேசிய வியாபார நிறுவனங்களின் அடியாட்களால் ஆட்சி செய்யப்படுகின்ற காலகட்டத்தில் பிரிக்ஸ் சரிந்து விழும் உலக வங்கியின் ஆதிக்கத்தை ஆசியா முழுவதும் உள்வாங்க முயற்சிக்கிறது. உலக வங்கியுடன் முரண்பாடற்ற வகையிலேயே பிரிக்ஸ் இயங்கும் என பொருளியலாளர்கள் எதிர்வு கூறுகின்றனர். இன்று மக்களின் தேவை இன்னொரு உலக வங்கியல்ல. முதலாளித்துவத்தின் அழிவிலிருந்து புதிதாக உதிக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் ஆட்சியே காலத்தின் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுபலசேனா ஆட்சி மாற்றத்துக்கான ஊக்கியாகத் தொழிற்படுமா?

பேருவள, அளுத்கம பகுதிகளில் முஸ்லீம்கள் தாக்கப்பட்டமை தொடர்பான செய்திகளை பன்னாட்டு ஊடகங்கள் உடனுக்குடன் வெளியிட்டன. இச்சம்பவங்கள் தொடர்பாக, தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும். இயங்கும் தமிழ்அமைப்புகள் பலவும் தமது கண்டனத்தை பதிவு செய்யும் வகையிலும், பாதிக்கப்பட்ட முஸ்லீம்களுக்கு ஆதரவாகவும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. வழமையாக சூடான விவாதங்கள் நடைபெறும் சமூகவலைத்தளங்களிலும் அவரவர் தமதுகருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். இராஜதந்திர முறையில் வெளியிடப்படும் சம்பிரதாயபூர்வமான அறிக்கைகளைக் காட்டிலும் சமூகவலைத் தளங்களில் பதிவிடப்படுபவை ஓரளவிற்கு பதிவரின்உள்ளத்தில் தோன்றும் உண்மையான கருத்துகளாக இருப்பதனால், சிறிலங்கா அரசாங்கத்துடன் ஒத்தோடிகளாக இருக்கும் முஸ்லீம்கள் விடயத்தில் நாம் அக்கறைகொள்ளத் தேவையில்லை என்ற கருத்து பல தமிழர்களால் முன்வைக்கப்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

ஐநா மனிதவுரிமைச் சாசனத்தின் இரண்டாவது பிரிவு "ஒவ்வொரு மனிதரும் அவர் சார்ந்த இனம்,சமூகம், நிறம், மொழி, மதம், பாலினம், அரசியல்கருத்துகள் போன்ற பாகுபாடுகளின்றி, சுதந்திரமாக வாழ்வதற்கு முழு உரிமையையும் கொண்டிருக்கின்றனர்" எனக்கூறுகிறது. இதனடிப்படையில் மட்டுமல்லாது, எல்லா மதங்களும் போதிக்கும் இறையியல் தத்துவங்களின் அடிப்படையிலும், அல்லது மதங்களை மறுக்கும் மாற்றுத் தத்துவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மனிதாபிமானத்தின் அடிப்படையிலும் இலங்கையில் வாழும் முஸ்லீம்கள் தமது மதத்தினை பின்பற்றுவதற்கு இடையூறு ஏற்படுத்துப்படுவதனை யாரும் நியாயப்படுத்த முடியாது. விடுதலைக்கு போராடும் இனம் என்றவகையில், இவ்விடயத்தில் பொறுப்புடன் செயற்படவேண்டிய கடப்பாடு ஈழத்தமிழ்மக்களுக்கு உண்டு.ஆகவே முஸ்லீம் சிறுபான்மையினர் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களை மனிதாபிமானமுள்ள அனைவரும் கண்டிக்க வேண்டும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. அதே சமயத்தில், முஸ்லீம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் பின்புலம் பற்றியும், இவ்விடயத்தில் அறிக்கைகள் வாயிலாக வெளியிடப்பட்ட எதிர்விகைளில் ஒளிந்திருக்கும் அரசியல் பற்றியும் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

மேற்படி வன்முறைசம்பவங்களுக்கு தனித்து பொதுபல சேனவையும், அவ்வமைப்பின் தலைவர்கலகொட அத்தே ஞானசார தேர்ரையும் குற்றம்சாட்டுபவர்கள் ஒன்றில் அறியாமையில் அவ்வாறுசெய்கிறார்கள் அல்லது சிறிலங்காவின் ஆட்சியதிகாரத்தை காப்பாற்றுவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள் என்றே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் பொதுபல சேன விடயத்தில் சிறிலங்கா ஆட்சி மையம் காட்டிவரும் அசதாரண சகிப்புத்தன்மை, அவ்வமைப்புடன் சிறிலங்கா ஆட்சிமையம் கொண்டுள்ள தொடர்புகள் பற்றியஐயப்பாட்டினை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. சிறிலங்கா ஆட்சிமையத்தைக் தவிர்த்து வெளிச்சக்திகளும் நிலமையை தமக்குச் சாதகமாக்கி தமது நலன் நோக்கிய நகர்வுகளை மேற்கொள்ள இச்சம்பவங்களைப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. ஆகையால், இத்துன்பியல் நிகழ்வு தொடர்பாக அறிக்கை விடுபவர்களையும், கருத்து வெளியிடுபவர்களையும் நாம் சந்தேகக் கண் கொண்டு பார்க்கவேண்டியிருக்கிறது.

### சிங்கள பௌத்த பேரினவாதமும் பொதுபல சேனவும்

பொதுபல சேனவின் தலைவர் ஞானசார தேரர் 2004ம் ஆண்டு தேர்தலில் மகிந்த இராஜபக்சவின் ஆளும் பொதுசன சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் மற்றொரு இனவாதக் கட்சியான ஜாதிக ஹெல உரிமயவின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர். கொழும்பில் சிறி சம்புத்த மந்திரவில் உள்ள பௌத்த கலாச்சார மையத்தில் பொதுபல சேனவின் தலைமையகம் அமைந்திருக்கிறது. இன்னொரு பௌத்த அமைப்புக்கு சொந்தமான இக்கட்டடம் மூன்று வருடங்களுக்கு முன்னர், அதாவது 2011 ம் ஆண்டுமே 15ம் திகதி மகிந்த இராஜபக்சவினால் திறந்துவைக்கப்பட்டது. கடந்த வருடம் காலியில் பொதுபலசேனவின் கட்டிடம் ஒன்றை கோத்தபாய இராஜபக்சதிறந்து வைத்தார். இத்திறப்பு விழா வைபவத்திற்குசிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த கோத்தபாய அங்கு உரையாற்றுகையில், தன்னை இவ்விழாவில் கலந்து கொள்ளவேண்டாம் எனப்பலரும் அறிவுரை கூறியதாகவும், ஆனால் இவ்விழாவின் முக்கியத்துவம் கருதி தான் கலந்து கொண்டதாகவும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணியில் ஈடுபட்டிருக்கும் பௌத்த துறவிகளையிட்டு அச்சப்படவோ அல்லது அவர்களையிட்டு ஐயப்படவோ தேவையில்லை" எனக் குறிப்பிட்டிருந்தார். இவற்றை வைத்துப் பார்க்கையில், பொதுபலசேன என்ற அமைப்பிற்கும் சிறிலங்காவின் ஆட்சி மையத்திற்கும் இடையில் தொடர்பிருப்பதைப் புரிந்து கொள்ளமுடியும். அதே சமயம்சிங்கள பௌத்த இனத்தின் காவலனாக, நவீனதுட்டகைமுனுவாக தன்னை நிலை நிறுத்தி தனதுவாக்கு வங்கியை சீர்குலையவிடாமல் வைத்திருக்கும் மகிந்த தம்மை மிஞ்சிய இனவாதிகளையிட்டு அச்சம் கொண்டிருப்பதில் நியாயமிருக்கிறது. இன்றுள்ள நிலையில் மகிந்தவை விடத்தீவிரமான இனவாதிகளாலேயே சிறிலங்காவின் ஆட்சி மாற்றத்தைஏற்படுத்த முடியும். இந்நிலையில் அவர்களது இனவாத நட்வடிக்கையை தடுப்பதன் மூலம் தமதுஆதரவுத்தளத்தில் வெடிப்புகள் ஏற்படுவதனை மகிந்தவால் அனுமதிக்க முடியாது. இராஜபக்ச சகோதரர்களைப் பொறுத்தவரை இது புலி வாலைப்பிடித்த கதைதான்.

### மேற்கின் நிலைப்பாடும், மதக்குழுக்களுக்கு எதிரான வன்முறையும்

2012ம் ஆண்டு பொதுபலசேன ஆரம்பிக்கப்பட்டது, அதற்கு முந்தைய வருடம் ஒக்ரோபர் மாதத்தில் அவ்வமைப்பின் முக்கியஸ்தர்களான ஞானசார தேரர், அதன் பேச்சாளர் டிலந்த விதானகேஉட்பட எட்டுப்பேர் கொண்ட குழுவொன்று, ழேசறநபயைெ 'நயஉநடிரடைனபைெ சுநளழரசஉந ஊநெவசந (ழேசுநுகு)என்ற அறியப்படாத அமைப்பு ஒன்றின் அழைப்பின்பேரில் நோர்வேக்கு சென்று அங்கு பலரைச்சந்தித்ததாக டிலந்த விதானகே ஊடகம் ஒன்றுக்கு வழங்கியபேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார். இச்சந்திப்பில் தாம் எரிக் சொல்ஹெய்மையும் சந்தித்துப் பேசியதாகவும் கூறியிருக்கிறார். மேற்படி பயணம் நடைபெற்றதை ஏற்றுக்கொண்டுள்ள நோர்வே அரசாங்கம் அப்பயணத்திற்கும் தமது அரசாங்கத்திற்கும் எதுவித தொடர்புமில்லை எனமறுத்துள்ளது. இக்குழுவினரை தாம் ஒருபோதும் சந்தித்ததில்லை என எரிக் சொல்ஹெய்ம் இக்கட்டுரையாளருடனான ருவிற்றர் தொடர்பாடலில் கூறியிருந்தார்.

கடந்த வருட முற்பகுதியில் பொதுபல சேனவின்குழு ஒன்று ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்று அங்கு சில வாரகாலம் தங்கியிருந்தது. உள்நாட்டில் இனவாத வன்முறைகளில் ஈடுபட்டிருந்தபோதிலும், இவ்வமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு அமெரிக்காவிற்கு நுளைவு அனுமதி பெற்றுக்கொள்வதில் சிரமமிருக்வில்லை. இவ்விடத்தில் குஜாராத் மாநிலத்தில் நடைபெற்ற முஸ்லீம்களுக்கு எதிரான கலவரத்தை காரணங்காட்டி அப்போதைய முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு பயணத் தடை விதிக்கப்பட்டமையைக் கவனத்தில் கொள்க.

### தமிழ் அமைப்புகளின் எதிர்வினை

முஸ்லீம் மக்கள் தாக்கப்பட்டமைக்கு எதிராக முந்தியடித்துக்கொண்டு அறிக்கை வெளியிட்ட தமிழ் அமைப்புகளில் பெரும்பாலானவை மேற்குல வெளிநாட்டு அமைச்சுகளினதும், சிந்தனை மையங்களினதும் ஆலோசனைக்கமைய செயற்பட்டு வருவதாகக் கருதப்படுபவை. இவற்றுள், அருட்தந்தை இமானுவலின் உலகத் தமிழர் பேரவை, வரதகுமாரின் தமிழ் தகவல் நடுவம், பிரித்தானிய தமிழர் பேரவை, கனேடிய தமிழர் பேரவை, அமெரிக்க தமிழர் செயலவை ஆகியவைமுக்கியமானவை. உலகத் தமிழர் பேரவை தனது அறிக்கையினை அரபு மொழியிலும் வெளியிட்டமை இங்கு கவனத்திற்குரியது. உலகத் தமிழர் பேரவையின் அரபுமொழி அறிக்கை வெளிவந்தஅதே தினத்தில், கொழும்பில் மகிந்த இராஜபக்ச பதினமு இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்களை அழைத்து நிலமையை விளக்கியதாக செய்தி வெளியாகியிருந்தது. ஐ.நா. மனிதவுரிமைச் சபையில் சிறிலங்கா தொடர்பான தீர்மானங்களை எதிர்க்கும் நாடுகளில் பெரும்பாலானவை இஸ்லாமிய நாடுகள் என்றை தகவலையும் இத்துடன் இணைத்துப்பார்த்தால் உங்கள் மனதில் மெல்லியதாக ஒரு படம் தோன்றலாம்.

கடந்த ஐநா தீர்மானத்தில் சிறுபான்மை மதக்குழுக்களுக்கு எதிரான தாக்குதல்கள் பற்றி பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கைத்தீவு விடயத்தில், சிறுபான்மை மதக்குழுக்கள் என்ற சொல் பரீட்சயமில்லாத ஒன்றாகவிருந்தது. அளுத்கம, பேருவள தாக்குதல்களுக்கு பின்னர் சர்வதேச ஊடகங்கள் அச்சொல்லைப் பயன்படுத்தி அதனை இப்போது பழக்கப்படுத்திவிட்டன.

வியாழன்று (யூன் 19) கொழும்பில் அமெரிக்கத்தூதுவர் மிசேல் சிசனை சந்தித்த முஸ்லீம் கொங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சிறுபான்மையினர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக நவநீதம்பிள்ளை அம்மையாரின் குற்றச்சாட்டுகளுக்கு இச்சம்பவங்களே ஆதாரம் எனக்குறிப்பிட்டதாக செய்தி வெளியாகியுள்ளது. ஆக, மார்ச் மாதத்தில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு இரண்டு மாதங்கள் கழித்து ஆதாரம் கிட்டியிருக்கிறது. இப்போது ஆட்சி மாற்றம் தொடர்பான முனைப்புகள் சற்று முன்னேற்றம் அடைந்துள்ளது போல் தெரிகிறதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பேப்பர்
http://www.orupaper.com/

# ஏமாறுபவர்கள் எப்போதும் ஏமாறுவார்கள்

...நாட்டு நடப்பு...

அவுஸ்திரேலியா அரசு தங்கள் நாட்டிற்குள் வேறு நாட்டவர்கள் சட்டவிரோதமாக உள்ளே வருவதையோ, அல்லது தஞ்சம் புகுவதையோ விரும்பாமல் அவ்விதமான நடவடிக்கைகளை தடை செய்ய கடுமையான சட்ட மூலத்தை தங்கள் மக்களவையில் நிறைவேற்றி அமுல்படுத்தி வந்தாலும் இன்னமும் சட்ட விரோதமாக அங்கு செல்பவர்களின் அங்கு செல்பவர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டதாக தெரியவில்லை.

அண்மையில் அங்கு இருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட 153 பேர் தொடர்பாக இதுவரை எவ்வித தகவலும் இல்லை. மேலும் இலங்கை கடற்படையினர் மீது புகார் தெரிவிக்கும் வேளையில் அங்குள்ள எதிர்கட்சிகள் பல அந்த நாட்டு அரசுக்கு எதிராக விரலையும் நீட்டி வருகின்றன.

'ஆட்கடத்தல் காரர்களிடம் அகப்பட்டு அல்லோகலப் பட வேண்டாம்' என எத்தனையோ தனியார் நிறுவனங்கள் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து பலவித விளம்பரங்களை மேற்கொண்டு இருந்தும் பலர் இன்னமும் ஏமாந்து கொண்டே வருகின்றனர்.



அந்த நடவடிக்கைகளில் பல அரசியல்வாதிகள் பின்புலமாக இருந்து செயல்படுவது அப்பாவி மக்களின் பணத்தை ஏப்பமிடவே. ஆனால் அந்த திமிங்கலங்களும், சுறாக்களும் சட்டத்தின் கரங்களில் இருந்து தப்பிவிடுகின்றார்கள். இறுதியில் அகப்படுவது நெத்தலி மீன் குஞ்சுகளான அப்பாவி பொதுமக்களே.

சட்ட விரோதப் பயணத்தின் போது அகப்பட்ட பலருக்கு எதிராக நாடளாவிய வகையில் பல நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவாகியுள்ளன. இனி சட்டத்தரணிகளைப் பற்றி விபரமாக கூறவா வேண்டும்? அந்த வழக்குகளுக்கு சட்டத்தரணிகளின் சட்ட உதவி தேவைப்படாது. காரணம் தண்டிக்கப்பட வேண்டிய குற்றத்தைப் புரிந்துள்ளதால் தண்டப்பணத்தை செலுத்திவிட்டு நீதிமன்றத்தை விட்டு வெளியில் வருவதே புத்திசாலித்தனம்.

சட்டத்தரணியால் அதில் வாதாடுவதற்கு ஒன்றுமே இல்லை. அப்படித்தான் வாதாடினாலும் சட்டத்தரணி தனக்கு வேண்டிய பணத்திற்காக ஆங்கிலத்தில் ஐந்தாறு வரிகளைப் பேசுவார். ஆனால் குற்றம் குற்றமே.

சட்டத்தரணி வாதாடிய காரணத்திற்காக புரிந்த குற்றத்தை குழிதோண்டிப புதைக்கவா முடியும்? என்ன! சட்டவிரோதமாக ஒரு நாட்டிற்குள் புகர முடியுமென்றால் குடிவரவு, குடியகழ்வு திணைக்களத்திற்கு ஏது வேலை? பாஸ்போட்டும், விசாவும் தேவையில்லை. ஏன்? அதற்கான அமைச்சரும் தேவையில்லை, அமைச்சும் தேவையில்லை.

அந்த சட்ட விரோத பயணங்களில் ஈடுபடுபவர்கள் இவற்றையெல்லாம் சிந்திக்கும் வரை அந்தப் பயணங்களை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. 'திருடனாகப் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது', என்ற பாடல் வரிகளை மறந்து விட முடியுமா?

மேலும் பலர் அந்த சட்டவிரோத பயணங்களில் ஈடுபடுவதற்கு இன்னும் ஒரு காரணியையும் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. அதாவது சகலவற்றுக்கும் காரணம் உப்புச் சப்பற்ற வீண் வதந்திகளே. அவுஸ்திரேலியாவிலிருந்து எனது மகன், மகள் நன்றாக உழைத்து மாதம் மாதம் பணம் அனுப்புகிறார்கள். எங்களின் உறவினர்கள் பலர் அங்கு இலட்சாதிபதிகளாக இருக்கின்றார்கள். சகல சுக போகங்களுடன் வசதியாக வாழ்கிறார்கள். என்றெல்லாம் பலர் உண்மைக்குப் புறம்பானவைகளை அயலில் பேசி வருவதால் அதற்கு ஆசைப்பட்டு அதற்கு இன்னும் பலர் அவ்விதமான ஆபத்து மிக்க பயணங்களில் ஈடுபட்டு வாழ்க்கையை கேள்விக்குறியாக்கிக் கொள்கின்றனர்.

சுமார் நூறு பேருக்கு எதிராக அப்பிரதேச நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அத்தனை வழக்குகளும் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முயன்றவர்கள் தொடர்பான வழக்குகளே. அந்த வழக்குகள் சுமார் ஒரு வருடத்திற்கு மேலாக இழுபட்டுக் கொண்டே செல்கின்றன.

ஒருவர் தான் புரிந்த குற்றத்தை ஒப்புக்கொண்டால் மேலதிக விசாரணைகள் அங்கு தேவையில்லை. குற்றத்திற்குரிய தண்டனையை விதித்து வீட்டுக்கு அனுப்பினால் இந்த நாட்டில் வழக்குகள் குவிந்து கிடக்க வாய்ப்பில்லை. இது வரை வருடக்கணக்கில் இழுபட்டுக் கொண்டிருக்கும் வழக்குகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்கள் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காமல் இருப்பது எமக்கு புதிய விடயமுமல்ல.

மேலும் அவ்விதமாக வழக்குகள் இழுபட்டுக் கொண்டே சென்றால் பலருக்கு பல வாய்ப்புக்கள் கிடைக்குமல்லவா? குறிப்பிட்ட வழக்குகள் அந்த நீதிமன்றில் கால வரையின்றி இழுபட்டுக் கொண்டே செல்வதால் சந்தேக நபர்களில் பலர் தொடர்ச்சியாக வழக்கு தவணைகளுக்கு செல்வதே இல்லை. நீதிமன்றத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்னவாக இருக்கும் என்பதை அறியாதவர்கள் எவ்வித பயமும் இன்றி வழக்கு தவணைக்கு கட்டாயம் செல்ல வேண்டுமென்பதில் எவ்வித அக்கறையும் காட்டுவதே இல்லை.

அவ்விதம் மூன்று தடவைகள் நீதிமன்றத்திற்கு செல்லாதவர்களுக்கு எதிராக குறித்த நீதிமன்றம் அழைப்பாணைகளை விடுத்திருந்தது! அப்படி இருந்தும் தொடர்ச்சியாக நீதிமன்றத்திற்கு செல்லாமல் இருந்தவர்களில் சிலர் அன்று நீதிமன்றம் சென்று இருந்தனர். ஆனால் அவர்களிடம் எதுவும் விசாரிக்காது வழமையாக வழக்கு தவணைகளுக்கு சென்றவர்களிடம் 'நீங்கள் ஏன் கடந்து தவணைகளில் நீதிமன்றம் வரவில்லை' என விசாரிக்கப்பட்டது.



'ஐயா, நாங்கள் நீதிமன்றத்திற்கு சமூகம் தடவையாவது என்று பதிலளிக்கப் யென்றால் தொடர்ச்சியாக கொடுக்கின்றோம். ஒரு சமூகமளிக் காமலல்ல' பட்டாலும் 'அப்படி இந்த நீதிமன்றம் பொய்யா கூறுகின்றது?' தவணைக்கு வராதபடியால் ரூ5000 ஒவ்வொருவரும் அபராதமாக செலுத்தும்படி மன்றினால் கட்டளையிடப்பட்டது.

தொடர்ச்சியாக நீதிமன்றுக்கு சமூகமளித்தவர்களில், ஒரு பெண் 'ஐயா நான் யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறேன். இது பெரும் அநியாயம் இந்த நீதிமன்றத்தில் ஏதொ தவறு நடந்துள்ளது. வந்தவர்களுக்கு பதிலாக வராதவர்களின் பெயர்கள் உரிய இடாப்பில் வந்ததாக கூறி அடையாளமிடப்பட்டுள்ளது' என்றார்.

'நீ என்ன அதிகம் பேசுகிறாய்? இந்த நீதிமன்றத்தை அவமதித்த உனக்கு ரூ10,000 அபராதமாக செலுத்த உத்தரவு இடுகின்றேன்.' என்றார் நீதிபதி.

மேலும் நியாயத்தை கூறினால், எங்கே அபராதம் இரட்டிப்பாகி விடுமோ என்ற பீதியில் குறித்த பெண் மௌனியாகினார்.

அங்கு தொடர்ச்சியாக உரிய வழக்கு தவணைகளுக்கு சமூகமளிக்கும் கணவனும் மனைவியும் தமது நிலையை சட்டத்தரணியொருவருக்கு ரூ1000 செலுத்தி நீதிபதியிடம் எடுத்துரைக்கும் படி கூறி இருந்தனர். சட்டத்தரணி நீதிபதி அருகில் சென்று ஆங்கிலத்தில் முணுமுணுத்தார். நீதிபதி அச் சட்டத்தரணியின் எந்த முணுமுணுப்பையும் காதில் வேண்டாது அந்த மனைவி கடந்த தவணைக்கு வந்திருந்தார் என மன்றினால் கூறப்பட்டதை ஏற்று கணவனுக்கு மட்டும் ரூ5000 அபராதம் விதித்தார்.

ஒரே குற்றத்திற்காக அந்தத் தம்பதிகள் இருவரும் தொடர்ச்சியாக ஒன்றாக மன்றுக்கு சமூகமளித்திருந்தும் மனைவியின் பெயர் மாத்திரமே அங்கு வந்ததாக அடையாளமிடப்பட்டதால் அவர் தண்டனையில் இருந்து தப்பிக்கொண்டார். ஆனால் கணவன் அகப்பட்டுக் கொண்டார்.

உண்மையில் சுமார் மூன்று தடவைகளுக்கு மேல் மன்றுக்கு சமூகமளிக்காததினால் பல சந்தேக நபர்களுக்கு அழைப்பாணை மன்றினால் வழங்கப்பட்டிருந்தும் அவர்களது பெயர்கள் அங்குள்ள இடாப்பில் சமூகமளித்துள்ளதாக அடையாளமிடப்பட்டி ருந்ததால் அவர்கள் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொண்டார்கள்.

உரிய தண்டனைப் பணத்தை செலுத்தி அன்று கையில் பணம் இல்லாத குறித்த வழக்கின் சந்தேக நபர்களுக்கு சிறைக்கம்பிகளை எண்ண நேர்ந்தன. அன்று குறித்த நீதிமன்றத்தில் இடம்பெற்ற குளறுபடிகள் பெரும் மர்மமாகவே இருந்தன. அதன் பின்புலத்தில் நிச்சயம் யாரோ ஒரு மர்ம மனிதர் அல்லது பல மர்ம மனிதர்கள் இருக்க வேண்டும் என்பது சகலருக்கும் புலனாகியது. ஏனென்றால் மிக அண்மையில் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றின் நீதிபதியொருவர் இலஞ்சம் பெற்று கைதாகிய விடயத்தை எவரும் மறந்து விடவில்லை. மேலும் மன்றுக்கு சமூகமளிக்காத சந்தேக நபர்களுக்கு அழைப்பாணைகள் விடுக்கப்பட்டதும், தண்டனைப் பணம் செலுத்தும் படி விடுக்கப்பட்ட கட்டளைகளுக்கும் மத்தியில் பாரிய மர்மங்கள் உள்ளன.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா கூட இன்று குற்றவாளிக் கூட்டில் நிறுத்தப்பட்டுள்ளார் என்பதை நாம் அறியாமலா என்ன? அப்படி பார்க்குமிடத்து குறித்த பிரதேசத்தினது நீதிமன்றின் குளறுபடிகள் தொடர்பில் தலைமைத்துவம் உள்ளிட்ட சகபாடிகள் பலர் வெகு விரைவில் குற்றவாளிக் கூட்டில் நிறுத்தப் பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

'உண்மையில் அப்பாவிகளான உங்களுக்கு இழைக்கப்பட்டது அநீதி என்பதனை நான் கறுத்தக் கோட் அணிந்திருந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் ஒத்துக்கொள்கிறேன். இன்றைய சூழலில் இவற்றை தட்டிக் கேட்க முடியாது. இருப்பினும் நீங்கள் தான் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும். இனிமேல் வழக்கிற்காக மன்றில் உங்களை பெயர் குறிப்பிட்டு கூப்பிடும் பொழுது வழக்கு ஆவணத்தில் உங்களின் பெயருக்கு நேராக அடையாளமிடப்படுகின்றதா? என்பதனை அன்றைய தினமே உறுதி செய்து கொண்டால் இப்படியான குளறுபடிகள் ஏற்பட வாய்ப்பிருக்காது.

அதற்காக பெரிய தொகைப் பணத்தை நீங்கள் செலவு செய்ய தேவையில்லை.இப்படியான வழக்குகளுக்கு சட்டத்தரணிகள் வாதிப்பதில் பிரயோசனமில்லை. நீங்கள் எனக்கு ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு தவணைக்கு ரூ500 தந்தால் போதும் நான் உங்கள் பெயருக்கு நேராக அன்று அடையாளமிடப்பட்டுள்ளதா என பார்த்து கூறுவென். அவ்விதம் மன்றில் அடையாள மிடப்படாதிருந்தால் நான் மன்றில் உத்தியோகத்தர்களைக் கொண்டு அடையாளமிடச் செய்வேன்' என்றாராம். அந்த மன்றிலுள்ள பிரபல சட்டத்தரணி ஒருவர் எப்படி இருக்கிறது அவரின் புத்திசாலித்தனம்?



சட்ட விரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற அப்பாவி நம்மவர்களின் நிலைமை 'பனையால விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல் ஆகிவிட்டது.

**- பாலையூற்றான் -**

## வேறு இடமே இல்லையா!!



இங்கிலாந்தைச் சேர்ந்த 27 வயது Carrie Preston என்ற பெண் நிறைமாத கர்ப்பிணிகளின் வயிற்றில் அவர்கள் விரும்பும் படங்கள் வரைவதையே தொழிலாக கொண்டுள்ளார். பல கர்ப்பிணி பெண்கள் தங்களுக்கு விரும்பிய படங்களை வரைந்து தருவதை முதலில் ஹாபியாக கொண்டிருந்த தான், தற்போது இதையே முழு நேர தொழிலாக மாற்றிவிட்டதாக கூறுகிறார்.

கர்ப்பிணி பெண்களுக்கு ஓவியம் வரையும் இவரும் ஒரு தாய் என்பது குறிப்பிடத்தக்கது. தான் கர்ப்பமாக இருந்தபோது தன்னுடைய குழந்தை தூங்குவதைப் போல் தனது வயிற்றில் வரைந்ததாகவும், அந்த ஓவியத்தை தனது கணவர் பெரிதும் பாராட்டினாராம்.

இதுவரை சுமார் 130 கர்ப்பிணி பெண்களின் வயிற்றில் படங்கள் வரைந்துள்ளதாக கூறும் அவர், இந்த தொழிலில் தாயாக போகும் பெண்களை திருப்தியடைய செய்வதால் தான் மிகவும் பெருமை அடைவதாகவும் கூறுகிறார்.

## 24மணி - 43,435 அடி

இங்கிலாந்தில் உள்ள 46 வயது தீயணைக்கும்படை வீரர் Roofer என்பவர் தொடர்ந்து 43,435 அடி உயரம் ஏணியில் ஏறி சாதனை புரிந்துள்ளார். 34 அடி உயரம் உள்ள ஏணியில் இவர் தொடர்ந்து 1000 முறைக்கும் மேல் ஏறி ஏறி இறங்கி இந்த சாதனையை செய்துள்ளார்.

இமயமலையில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதைவிட சுமார் ஒன்றரை மடங்கு அதிக உயரம் இவர் ஏறியுள்ளதாக உலக சாதனை புத்தகத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது. இவர் இந்த சாதனையை 24 மணிநேரத்தில் தொடர்ந்து ஏணியில் ஏறி ஏற்படுத்தி யுள்ளார். இதற்கு முன்பு 43,000 அடி உயரம் ஏணியில் ஏறியதே சாதனையாக கருதப்பட்டது.



Roofer Keith Saunders அவர்களின் உலக சாதனைக்காக அவருக்கு £1,800 மற்றும் சிறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாக்லெட்டிலும் செக்ஸ்?



இங்கிலாந்து தலைநகர் லண்டனை சேர்ந்த Robin Jacobs என்ற 31 வயது வழக்கறிஞர் உலகக்கோப்பை கால்பந்து போட்டியின் இறுதிப்போட்டி ஒன்றில் நெஸ்ட்லே நிறுவனத்தில் கடை ஒன்றில் மில்க்கிபார் சாக்லெட் ஒன்றை வாங்கி சாப்பிட்டுக்கொண்டே போட்டியை ரசித்து பார்த்துள்ளார். அப்போது தற்செயலாக தான் சாப்பிடும் சாக்லேட்டை பார்த்தபோது அதில் ஆணுறுப்பின் படம் இருந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

குழந்தைகள் விரும்பி சாப்பிடும் மில்கிபார் சாக்லேட்டில் இதுபோன்ற அருவருப்பான படங்கள் வந்ததை தன்னால் ஜீரணிக்கவே முடியவில்லை என்று ஆவேசமாக ஊடகங்களுக்கு பேட்டியளித்தார்.

இதுகுறித்து கருத்து கூறிய நெஸ்ட்லே நிறுவன அதிகாரி ஒருவர், "குதிரையின் தலை படம்தான் வரைய நாங்கள் திட்டமிட்டது. ஆனால் தவறுதலாக இந்த படம் இடம்பெற்றுவிட்டது. நடந்த தவறுக்கு மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம். இனி எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் ஏற்படாதவாறு கவனமாக செயல்படுவோம்" என கூறியுள்ளார்.

சிறுகதை

# உதவும் கரம்

அந்தச் சிறிய நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. சின்னச் சின்ன சந்துகள் கூட வண்ணத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அப்பகுதியின் மாபெரும் மக்கள் தலைவராகத் திகழ்ந்தவரின் நினைவு நாள் விழா அன்று நடைபெறுவதாகவிருந்தது. ஆண்டுதோறும் இந்த விழா உற்சாகமாகக் கொண்டாடப்படுவது வழக்கம். ஆனால் அன்றைய தினம் விழா பற்றி ஊர்மக்கள் அனைவருமே உற்சாகம் காட்டினார்கள்.

முக்கிய சாலையின் குறுக்கே பெரிய மேடை போட்டிருந்தார்கள். அதைக்கூடப் பலர் குறை கூறினார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் வருவார்கள் என்று எதிர்பார்ப்பதால் அந்தக் கூட்டத்தை வாரச் சந்தைத் திடலில் போட்டிருக்கலாம் என்றும் பேசிக் கொண்டார்கள். மேடை அலங்காரப் பணி காலையிலேயே தொடங்கிவிட்டதால் அந்த வழியாகப் போய் வரும் பேருந்துகள் நீண்ட தூரம் சுற்றி வளைத்துச் செல்ல வேண்டியிருந்தது. வழக்கமாக இது போன்ற நேரங்களில் மனச்சங்கடமும், குமைச்சலும் அடையும் மக்கள் அன்று அது பற்றிக் கலவைப்பட்டதாகக் தெரியவில்லை.

இத்தனை மகிழ்ச்சிக்கும், ஆர்வத்திற்கும் மையமாக இருந்தது பிரபல சினிமா நடிகர் ஒருவரின் வரவுதான். இந்த விழாவில் கலந்து கொள்வதற்கென்றே அவர் சென்னையிலிருந்து வருகிறார். பட்டிதொட்டி எங்கும் விளம்பரப்படுத்தப்பட்டது. அவரது பெயரில் இயங்கிவந்த மன்றங்கள் மட்டுமல்ல, பிற நடிகர்கள், நடிகைகள் பெயரில் இயங்கிவந்த மன்றங்கள்கூட விழாவுக்கு வரும் நடிகரை வரவேற்று பெரிய பெரிய சுவரொட்டிகள் ஒட்டியிருந்தன.

நடிகர் வரும் வழி நெடுகிலும் ஐந்து மைல் தூரத்துக்கு சாலையின் குறுக்காக பெரிய பதாகைகள் கட்டப்பட்டிருந்தன. "இத்தனை துணிகளையும் ஒன்றாகச் சேர்த்தால், அந்த ஊரில் படிக்கும் பையன்களுக்குச் சட்டை தைத்துப் போட்டு விடலாம்" என்று காலையில் தேநீர்க் கடையில் கருத்துத் தெரிவித்த பொதுநலத் தொண்டர் ஒருவர் பலமாக உதைக்கப்பட்டு அது போலீஸாரின் வழக்காக ஆனதும் நல்ல விளம்பரமாக அமைந்துவிட்டது.

பிரபலமான நடிகர் சிறப்புரை நிகழ்த்த விருப்பதால் குறிப்பிட்ட நபர்களைத்தான் மேடையில் ஏற்ற வேண்டும் பேச வைக்க வேண்டும் என்பதில் விழாக்குழுவினர் அதிக அக்கறை காட்டினார்கள்.

நடிகர் வருவதற்கு முன் யார் யார் பேச வேண்டும், நடிகர் முன்னிலையில் யார் யார் உரை நிகழ்த்தவேண்டும், என்பது கூட முடிவு செய்யப் பட்டிருந்தது உரையாற்றுவோரில் ஓய்வு பெற்ற ஆசிரியர் பாலுசாமியும் இடம் பெற்றிருந்தார். மறைந்த தலைவரைப் பற்றி நன்கு அறிந்தவர் என்பதாலும் மேடையைத் தவறாகப் பயன்படுத்தமாட்டார் என்பதாலும் அவர் பெயர் பலராலும் பரிந்துரைக்கப்பட்டது.

காலை பதினோரு மணியிருக்கும். நூலகநேரம் முடியவே பாலுசாமி வீடு திரும்பினார். வழக்கமாக வருகின்ற வழியில் தான் வந்து கொண்டிருந்தார். "ஐயா...ஐயா...." என்று குரல் கேட்கவே திரும்பிப் பார்த்தார். அந்த வீட்டு வாசலில் நடுத்தர வயதில் ஒரு பெண்ணும் பதினைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பையனும் நின்று கொண்டிருந்தனர். அவர்களுடைய தோற்றமே ஏழ்மை நிலையை எடுத்துரைப்பதாக இருநத்து.

"ஐயா... ஒரு அஞ்சு நிமிஷம் வந்துட்டுப் போங்க" என்று அழைத்தாள் அப்பெண். பாலுசாமி வழக்கமாகச் செல்கின்ற பாதை என்பதால் அந்தப் பெண்ணைப் பல முறை பார்த்திருக்கிறார்.. கூலிவேலை செய்து வருபவள் என்ற அளவில் தெரிந்து வைத்திருந்தார்.



அவள் தன்னை அழைத்ததன் காரணத்தை அவரால் ஊகிக்க முடியவில்லை. முன் பின் அறிமுகமில்லாத தன்னை ஏன் அழைக்க வேண்டும் என்று குழம்பினார். மிகச் சிறிய அந்த ஓட்டு வீட்டுக்குள் குனிந்து நுழைந்தார். அதற்குள்ளாக தூசியைத் துடைத்துவிட்டு ஒரு நாற்காலியை போட்டாள் அந்தப் பெண். தனது தோளில் கிடந்த துண்டால், வழிந்து ஓடிய வியர்வையைத் துடைத்தவாறு அமர்ந்தார் பாலுசாமி.

"ஐயா... இன்னைக்கு கூட்டத்தில நீங்களும் பேசப் போறதா என் மகன் சொன்னான்...."

"ஆமாம்மா.... அதுக்கு என்ன...?"

பாலுசாமி மேலும் குழம்பிப் போனார். கூட்டத்தில் பேசுவதற்கும் இந்த பெண்ணுக்கும் என்ன தொடர்பு. எதற்காக அதைக்கேட்க வேண்டும் என்று தயங்கினார். அந்தப்பெண்ணே புதிரை விடுவித்தாள்.

"ஐயா... உங்களாலே ஒரு சின்ன உதவி வேணும். என் பேரு கமலா. இவன் என் பையன் எனக்கு மூணு பிள்ளைகள்".

"சரிம்மா... உங்களுக்கு நான் என்ன செய்யணும் அதைச் சொல்லுங்க"

"ஐயா... உங்களுக்குத் தெரியுமான்னு எனக்குத் தெரியலே... என் கணவர் பெயர் கணேசன் ஒரு காலத்திலே அவரும் நடிகர் தான்."

"அப்படியா... அவர் இப்ப என்ன செய்கிறார்?".... ஏன் தான் கேட்டோம் என்று பாலுச்சாமி பதறிப்போனார். அந்தப் பெண் பொல பொல வென்று கண்ணீர் சிந்தினார். தன் நிலைக்கு வர அவளுக்கு இரண்டு மூன்று நிமிடங்கள் பிடித்தன.

"அவர் இப்ப இல்லே. அவர் செத்துப் போய் பத்து வருசம் ஆச்சு. ஐயா நாங்க காதலிச்சு கலியாணம் செய்துகிட்டோம். அதனால அவர் இறந்தபிறகு நான் யார் வீட்டுக்கும் போக முடியலே. இந்த மூணு பிள்ளைகளையும் வச்சுக்கிட்டு நான் படுற பாடு... என்னத்தையா சொல்றது. அதிலே மூத்தவ வயசுக்கு வந்து ஆறேழு வருசமாச்சு. இவளை எப்படிக் கரையேத்தப் போறேனோ...."

இதைக் கேட்டதுமே பாலுசாமி வெட்கத்தால் நாணிப்போனார். எத்தனையோ ஆண்டுகளா இந்தப் பாதை வழியாகத்தான் போய் வருகிறார். ஆனால் அந்தச் சிறிய வீட்டிற்குள்ளாக இத்தனை பெரிய சோகம் அடைபட்டுக் கிடப்பதை அறியாமல் போனமைக்காக வெட்கப்பட்டார். இந்நிலையில் தன்னிடம் என்ன கோரிக்கை வைக்கப் போகிறாளோ என்ற அச்சமும் அவருக்கு ஏற்பட்டது. தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு கேட்டார்.

"சரிம்மா... நான் என்ன செய்யணும், அதை சொல்லலியே...?"

"ஐயா.. இன்னைக்குக் கூட்டத்திலே பேசப் போறாரே நடிகர், அவரும் என் கணவரும் ரொம்ப நெருக்கமா இருந்தாங்க. சென்னையிலே ஒரே காலனியிலே பத்து வருசம் ஒன்னா குடியிருந்தோம். பக்கத்துப் பக்கத்து வீடு. அப்ப இவரும் சில்லறை வேஷந்தான் போட்டாரு. என் கணவர் மாரடைப்பாலே திடீர்ன்னு இறந்தப்ப நிலை குலைஞ்சு போயிட்டோம். அவரை எடுத்து அடக்கம் பண்ணவும், பிற காரியங்களுக்கும் இவருதாய்யா ரொம்ப உதவியா இருந்தாரு".

"ஏம்மா... அப்ப இந்த நடிகரை உங்களுக்கு நல்லாத் தெரியுமா...! அவர் பெரிய நடிகரா இருக்கிறதுனாலே உதவி கேட்டு வாங்கலாமே... கேட்டா அவரும் செய்யாமலா இருப்பார்". தன்னால் கூற முடிந்த ஆறுதல் வார்த்தைகளைக் கூறிய பாலுசாமி இப்போது சற்று தெளிவு பெற்றார். தன்னை அந்த அம்மாள் அழைத்ததன் நோக்கத்தை ஓரளவு புரிந்து கொண்டார்.

சற்ற நேர அமைதிக்குப் பிறகு கமலா தொடர்ந்தாள். "ஐயா கணவர் இறந்த பிறகு வீட்டு வாடகைகூட என்னால கொடுக்க முடியலே. அப்ப பிள்ளைங்களும் சின்னதுகள். ஒருநாள் ராத்திரி யாருக்கும் சொல்லாம ரயிலேறி இங்கே வந்துட்டோம். கூலிவேலை செய்து பிள்ளைகளைக் காப்பாத்தி வர்றேன்"

"நான் என்ன செய்யனும், இப்ப அதைச் சொல்லுங்க...."

"அந்த நடிகரோடு மேடையிலே இருப்பீங்கல்ல. அந்த நேரத்தில் எங்களைப்பத்தி அவர்கிட்ட சொல்லுங்க. ஏதாவது உதவி செய்வார்னு நம்புறேன்."

"நல்லதும்மா... என்னால முடிந்ததைச் செய்யுறேன்... எதுக்கும் நீங்க முன்னதாகவே அங்கே வந்து என் கண்லபடுற மாதிரி நில்லுங்க. நேரம் பார்த்து உங்களை அவரிடம் கூட்டிப் போறேன்."

"ஐயா... நீங்க நல்லா இருக்கணும். ஆண்டவன் உங்க புள்ள குட்டிகளைக் காப்பாத்துவான். இந்த உதவியைச் செய்தா என் உயிர் உள்ள வரைக்கும் உங்க நன்றியை மறக்க மாட்டேன்."

கமலாவின் வார்த்தைகள் அவரது நெஞ்சைத் தொட்டன. இந்த அபலைப் பெண்ணுக்கு எப்படியாவது உதவவேண்டுமே என்ற ஆதங்கம் அவரிடத்தில் மேலோங்கியது.

அங்கிருந்து விடைபெற்று வீட்டை நோக்கி நடக்கலானார். அன்றைய கூட்டத்தில் தலைவரது சிறப்புகளை எப்படியெல்லாம் எடுத்துரைப்பது என்பது பற்றியே சிந்தித்து வந்த, அவர், இப்போது அந்த நடிகரிடம் பேசி ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற உந்துதல் பெறலானார்.

மாலை ஏழு மணிக்கு கூட்டம் என அறிவிக்கப்பட்டிருந்தாலும் ஐந்து மணிக்கே கூட்டம் அலைமோதியது. சினிமாவையும் நடிகர்களையும் கேவலமாகப் பேசுபவர்கள் கூட ஏதோ, சாக்கில் சற்று தள்ளி ஓரத்தில் நின்றவாறு நடிகரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வழக்கமாகச் சுணங்கியே மேடைக்குவரும் தலைவர்களைப் போல் அல்லாது சரியாக ஏழு மணிக்கே அந்த நடிகர் காரில் வந்து இறங்கினார்.

கூட்ட நெரிசலில் அவரைப் பத்திரமாக மேடையேற்றுவதே போதும் போதும் என்றாகி விட்டது. வாழ்க முழக்கங்கள் விண்ணை எட்டின.

நிகழ்ச்சியும் உடனடியாகத் தொடங்கியது. நடிகருக்கென அலங்கார இருக்கை போடப்பட்டிருந்தது. தலைக்குமேலே கையை உயர்த்திக் கும்பிட்டவாறு அதில் வந்து அமர்ந்தார். புன்னகை செய்தவாறு இங்கும் அங்கும் திரும்பிப் பார்த்தார். கூட்டத்தினர் அதிசயத்தைப் பார்ப்பது போல அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பாலுசாமி ஓரத்தில் அமர்த்தப்பட்டார். சற்றுமுன்னர் இருந்த உற்சாகம் இப்போது அவரிடமில்லை. நடிகருக்கும் அவருக்கும் இடையே இரண்டு பேர் அமர்ந்திருந்தார்கள். அவர்களைத் தள்ளி உட்கார வைக்கவும் முடியாது. இங்கிருந்தவாறு பேசவும் முடியாது என்று குழம்பினார். அந்த ஏழைப் பெண்ணுக்கு உதவக்கூடிய வாய்ப்புத் தனக்கு ஏற்பட்டிருப்பதை எப்படியும் நல்ல முறையில் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டிருந்தார். இதற்குள்ளாக வீடியோ படங்களும் புகைப்படங்களும் எடுக்கப்பட்டன.

விழாத் தலைவர் உரையாற்றத் தொடங்கினார். அந்த நேரத்தில் நடிகர் தன் பின்னால் நின்ற ஒருவரிடம் ஏதோ கூறலானார். அவ்வளவுதான் ஏதோ அதிசயம் நிகந்ததுபோல பாலுச்சாமிக்குப் பக்கத்து இருக்கைக்கு வந்து நடிகர் அமர்ந்தார். பிறகுதான் புரிந்தது தலைக்கு மேல் ஒளிவிட்டுக் கொண்டிருந்த "மெர்க்குரி" வெளிச்சத்தையும், விளக்கைச் சுற்றி மொய்த்துக் கொண்டிருந்த கொசுப் ப[illegible]

இப்போது பாலுச்சாமிக்கு [illegible] வார்த்தது



போலிருந்தது. அவருக்கு ஆண்டவனாகப் பார்த்து தனது பக்கத்தில் நடிகரை அமர வைத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார். இனி நேரம் பார்த்துச் சொல்லி விடவேண்டியது தான் என்று அவரது நெஞ்சு பரபரத்தது. எதிரே ஓரத்தில் ஏக்கத்தோடு நின்று கொண்டிருந்த கமலாவையும் அவ்வப்போது பார்த்துக் கொண்டார்.

இவருக்கு வாய்ப்பு வருவதற்குள்ளாக மூன்று பேர் உரையாற்ற நேர்ந்தது. பாலுசாமி பதைபதைத்தார். நடிகர் பக்கமாகத் தலையைத் திருப்பி வணக்கம் சொன்னார். நடிகரும் மகிழ்ச்சியோடு பதில் வணக்கம் செலுத்தினார். இரண்டே நிமிடங்களில் தான் சொல்ல வேண்டியவற்றை குறள்போல சுருங்கச் சொன்னார். இதை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த நடிகர், "அப்படியா... அவங்க இங்கேயா இருக்காங்க...! எனக் கேட்டார். பாலுசாமி பதில் சொன்னார்.

நடிகர் மீண்டும் வாய் திறந்தார். "சரி இப்ப நான் அவங்க வீட்டுக்கு வரமுடியாதே...."

"ஐயொ... அதெல்லாம் வேண்டாம். அந்த அம்மாவே இந்தக் கூட்டத்துக்கு வந்துருக்காங்க. மேடைக்குப் பின்னால நிற்கச் சொல்லியிருக்கேன். கூட்டம் முடிந்ததும் நீங்க ஒரு நிமிசம் அவங்ககிட்டே பேசினால் போதும்...." என்றார்.

நடிகர் கறுப்புக்கண்ணாடி அணிந்திருந்ததால் அவரது உள்ளத்தைக் கண்களின் வழி காணமுடியவில்லை. பாலுசாமி மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தார். இந்த அளவுக்கு வந்த பிறகு காரியம் நடக்காமலா போகும் என்று கருதினார். பிரபலமான நடிகரிடம் ஆசிரியர் பாலுசாமி என்னதான் பேசுகிறாரோ என்று கூட்டம் வியப்போடு நோக்கியது. அவருக்கு அடித்த யோகத்தைப் பாருங்களேன் என்று ரசிகர்கள் கண்களை அகலவிரித்தவாறு நோக்கினார்கள்.

அடுத்துப் பேச வாய்ப்பு பாலுசாமிக்கு வந்தது. பேசிய பத்து நிமிடங்களில் நடிகரைப் புகழ்ந்து இரண்டு நிமிடங்கள் பேசினார். அந்தப் புகழ்ச்சி அவர் மனசாட்சிக்குப் புறம்பாகவே இருந்தது. இருந்தாலும் ஏழைப் பெண்ணுக்கு உதவி என்பதால் மன உறுத்தலைப் பொறுத்துக் கொண்டார்.

கடைசியா சிறப்புரை நிகழ்த்துவதற்காக நடிகர் எழுந்தார். இதுவரை அமைதியாக இருந்த கூட்டம் நடிகரை நெருக்கத்தில் காண வேண்டும் அவரது அங்க அசைவுளைக் கவனிக்க வேண்டும் என்பதற்காக முண்டியடித்து முன்னே வந்தது அமைதிப் படுத்துவதற்குள் பெரும்பாடாகிப் போனது. இதற்கிடையே நடிகர் பேசத் தொடங்கினார். மறைந்த தலைவரின் சிறப்புகளை எடுத்துரைத்தார்.

"இன்று இந்த அளவுக்கு மறைந்த நமது தலைவருக்கு மரியாதை கெய்கிறோம் என்றால் அதற்குக் காரணம் அவரிடமிருந்த மனிதாபிமானமே வேறு எந்தத் தலைவரிடமும் இந்தப் பண்பைப் பார்க்க முடியாது. மனிதனுக்கு மனிதன் உதவ வேண்டும். உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்ற மாண்பினை நமக்கு எடுத்துச் சொன்னவர் நம் தலைவர். அவரது தொண்டர்கள் என்று சொல்லிக் கொள்வதில் நாம் பெருமை படுகிறோம். அவரது கொள்கைகளைப் பின்பற்றுவதே அவருக்கு நாம் செய்கின்ற மகத்தான அஞ்சலியாகும்."

இப்படியாகப் பேசிக் கொண்டே போனார் அந்த நடிகர். அவரது இந்தப் பேச்சின் மறைபொருள் எதுவென்பது பாலுசாமி ஒருவருக்கே புரிய முடியும். நெஞ்சமெல்லாம் இனிப்பதுபோல அவர் உணர்ந்தார். தனது கோரிக்கையை ஏற்று உரையின் ஊடாக இத்தகைய கருத்தைத் தெரிவிப்பார் என்று பாலுசாமி துளியும் கருதவில்லை. இப்போது கடைசியாக ஒரு முறை தொலைவில் நின்ற கமலாவைப் பார்த்தார். பொருள் பொதிந்த தனது பார்வையை அந்த ஏழைப்பெண் புரிந்து கொண்டிருப்பாள் என்பது போல அவரது பார்வை இருந்தது. கைக்கு எட்டி விட்டது. இனி வாய்க்கு எட்ட வேண்டியது தான் பாக்கி.

இதற்கிடையே நடிகரது உரை முடிவுற்றது. யாரோ ஒருவர் நன்றி கூறினார். மேடையின் ஒழுங்கும் கூட்ட ஒழுங்கும் குலையத் தொடங்கியது. இந்த நெருக்கடிகளுக்கிடையே நடிகரை ஒட்டி நின்றார் பாலுசாமி. நடிகரும் பாலுசாமி பக்கமாக நோக்கினார். நடிகரை மேடையை விட்டுக் கீழே இறக்கினார்கள்.

தொலைவில் நின்ற கார் மேடையருகே கொண்டுவரப்பட்டது. இதற்குள்ளாக கையை ஆட்டி கமலாவைத் தன்பக்கம் வருமாறு சமிக்ஞை காட்டினார் பாலுசாமி. அந்தப் பெண்ணும் முண்டியடித்துக் கொண்டு, நெரிசலில் சிக்கியவாறு அவர்கள் பக்கமாக வரலானாள். அவளது கோலம் முன்னிலும் மோசமாக இருந்தது.

"சார்... இந்தா அந்த அம்மா வந்துட்டாங்க...." என்றார் பாலுச்சாமி. பின் பக்கமாகத் திரும்பினால் கமலாவைப் பார்த்துப் பேசிவிடலாம். அதற்குள்ளாகக் காரின் கதவைத் திறந்து கொண்டு நடிகர் உள்ளே அமர்ந்தார். கதவும் சாத்தப்பட்டது.



ஏற்கனவே காரின் கண்ணாடி தூக்கி விடப்பட்டிருந்ததால், நடிகரைப் பார்க்கவோ பேசவோ முடியவில்லை. காரும் நகர்ந்தது.

தரையில் போட்பட்ட மீன் போல பாலுசாமியின் பாசநெஞ்சம் துடிக்கலானது. தனது உயிரினும் மேலான ஒருவரைப் பறிகொடுத்ததைப் போல பரிதாபமாக நின்றார் பாலுசாமி.

நன்றி - நிழல்கள் தமிழ் கூடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெட்கம் வெட்கம்



வெட்கம் வெட்கம் வெட்கம்
வேதனையை வெளிப்படுத்துவதை
விட
விவேகமாக செயல்படுவதே
வீரர் செயல் ஆகும் நல்ல
மாட்டிற்கு ஒரு சூடு நற்
பெண்டாட்டிக்கு ஒரு சூடு
எத்தனை இடர்பாடுகள்
எண்ணிச் சொல்ல முடியாது
முஸ்லீம் தலைவர்களே
முறையாக சிந்திப்பீர்களா
காலம் கடத்தும் செயல்
முஸ்லீம் முகங்கள் சுருங்குகின்றன
பள்ளி வாசல்கள் பகடைக்காய்களா
பார்ப்பதற்கோ வேதனை வேதனை
சட்டங்களோ சதிகாரர்கள் கையில்
சமாதானம் என்பதோ சஞ்சலத்தில்
வெட்கம் கெட்ட மனிதர்கள்
வீதியில் வலம் வரும் வேளை
வெருண்டு வெருண்டு வாழ்வதை
விட
வீரமுடன் வாழ்வை முடிப்போம்
விவேகிகளே சிந்திப்பீர்களா?

*சீ.என்.துரைராஜா*

## பேசப்படுபவை



இனப் பாகு பாடு இங்கு
இல்லையென பகிரங்க
ஏலம் விடப் படுகின்றது
ஜன நாயக நீரோட்டம்
நடப்பதாக இங்கு
நாடு முழுவதும் பறை
ஓசை ஒலிக்கின்றது!
மனித நேயமும் உரிமையும்
மதிக்கப் படுவதாக இங்கு
இனிமையான வார்த்தைகள்
இசைக்கப் படுகின்றது!
ஊடக சுதந்திரம் இங்கு
நாடளாவிய ரீதியில்
உறுதிப் படுத்தப் பட்டுள்ளதாக
உரக்க பேசப்படுகின்றது!

– சேனையூரான் –

## களைகள் இல்லையே!

மலையாரே, மலைமுரசு படிக்கிறீர்களா?
மலைத்திடுவீர், மலைமுரசு படித்திடுவீரேல்!
இலை- இலையே - நேரமிலை, என்கிறீர்களா?
விலை இலையே, இருபதொடும் பத்துச்சேருமே!

ஒரு முரசில் பல முரசாம், உயர்கவிமுரசாம்-
சிறுவர்முரசு- சினிமுரசாம்- தீன்முரசோடும்-
அரிய விளையாட்டு முரசாம்- தேர்வும் காட்டுமாம்...
பெறும் ஒருவர் கற்றுவிட்டால் பிறகும் பெறுவராம்!

சில உளவாம், படித்துவிட்டால் தீன் பொதிக்காகும்!
சில உளவாம், படித்துவிட்டால் செய்வராம் கப்பல்!
மலை முரசோ கற்றபின்னர் மடித்து வைக்கலாம்!
கலகலக்கும் நெற்பயிரே, களைகள் இல்லையே!

.. தாமரைத்தீவான்.. [ஈச்சந்தீவு, கிண்ணியா]

## என்னிடம் சொர்க்கத்தின் துகில்கள் இருக்குமாயின்

என்னிடம்
சித்திரப் பின்னல்கள் இட்டு நெய்யப்பட்டும்
தங்கமும் வெள்ளியும் ஒளிகால
நீலமும் மந்தமும் இருண்டதுமான
இரவையும் பகலையும் பாதி ஒளியையும் இட்டு
உருவாக்கப்பட்ட சொர்க்கத்தின் துகில்கள் இருக்குமாயின்
அவற்றை நின்காலடியின் கீழ் பரப்புவேன்
ஆனால் நான்,
ஏழையாய் இருப்பதால்
என்னிடம் இருப்பதெல்லாம் கனவுகளே
எனது கனவுகளை நின்காலடியின் கீழ் பரப்பியுள்ளேன்
மெதுவாக மிதியுங்கள்
ஏனெனில்
என் கனவுகள் மீது மிதிக்கிறீர்கள்.

நூல் : மறுபாதி
–டபிள்யூ பி.யேற்ஸ்–
தமிழில் : மு.பொன்னம்பலம்

## அழகு

கங்கைக்கு களங்கமற்ற
நீரோட்டமழகு
கடலுக்கு கரை புரளும்
அலையழகு!

மங்கையர்க்கு வனப்பூட்டும்
மார்பழகு
மானுக்கு வளைவு நெளிவான
கொம்பழகு!

சங்குக்கு அதனுடைய
கழுத்தழகு
சந்தத் தமிழுக்கு
அழுதச் சுவையழகு!

திங்களுக்கு திகழும்
ஒளியழகு
தங்கத்திற்கு புடம்
போடப்போட
மெழுகேறுமழகு!

– சேனையூரான் –



# இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்லூபால வன்னிபத்தின் உயில்:

**பாகம் 03**



### திருகோணமலை வன்னிபங்களும் அதன் தேசவழமைகளும்

திருகோணமலைப் பிரதேசத்தில் வன்னிபங்களின் ஆட்சி திருகோணமலை மக்களின் வரலாற்று நாயகனாகிய குளக்கோட்டு மன்னன் காலத்தில் சிறப்பிடம் பெற்றிருந்ததோடு, ஒரு ஒழுங்கு படுத்தப்பட்ட வரையறைகளையும் கொண்டிருந்தது. அக்காலத்தில் திருகோணமலை மாவட்டம் நான்கு வன்னிப் பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வன்னிபங்களின் நியமனம், கோணேஸ்வர ஆலய, கந்தளாய்க்குளத் திருப்பணிகள் என்று திருகோணமலை வரலாற்றில் முக்கிய அத்தியாயங்களைத் தொடங்கி வைத்த வரலாற்றுப் புகழுக்குரிய குளக்கோட்டு மன்னன் காலத்தில் திருகோணமலைப் பிரதேச வன்னிமைகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

1. திருகோணமலைப்பற்று (நகரப்பகுதி)
2. கட்டுக்குளப்பற்று.
3. கொட்டியாரப்பற்று.
4. தம்பலகாமப்பற்று.

இந்நான்கு குறுநிலப்பிரிவுகளும் தனியான சுயாட்சி அலகுகள் என்பதற்கு அவை கொண்டிருந்த அதிகாரங்கள் ஆதாரங்களாகின்றன. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஐரோப்பிய காலனித்துவ நிர்வாகிகளால் எழுதப்பட்ட நூல்கள் இந்நான்கு வன்னிப்பற்றுக்களையும் 'அரசுகள்' என்று குறிப்பிடுகிறது. இங்கு வன்னிபங்களின் தலைமையில் கூட்டப்பட்ட கூட்டங்கள் 'மகாநாடு'என்றே அழைக்கப்பட்டிருக்கிறது. பயிர்ச்செய்கை விருத்தியால் தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்த திருகோணமலையின் நான்கு வன்னிப் பற்றுக்களும் வன்னிபங்களின் காலத்தில் இருந்து ஐரோப்பியரின் ஆக்கிரமிப்பின் தொடக்கம் வரை சிறப்புற விளங்கியது குறிப்பிடத்தக்கது.

கோணேசர்கல்வெட்டு என்னும் நூலில் இந்த நான்கு வன்னிப் பிரிவுகளிலும் ஆட்சிபுரிந்த வெவ்வேறான குலத்து வன்னிபங்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் திருகோணமலைப் பற்று வன்னிபங்கள் 'பூபாலகட்டு' என்னும் இடத்திலுள்ள மாளிகையில் வாழ்ந்தனர். 'தனியுண்ணாப் பூபாலன்' என்பது அவர்களது சிறப்புப் பெயர். அவர்கள் 32 பேரின் பெயர்ப்பட்டியல் கோணேசர் கல்வெட்டில் காணப்படுகிறது. அவற்றோடு மூன்று வன்னிப குலங்களின் விபரங்கள் காணப்படுகின்றன. அவை முறையே மருங்கூர் வன்னிபம், சோழநாட்டு வன்னிபம், காரைநகரால் வந்த வன்னிபம் என்பனவாகும். இவற்றில் பரம்பரை பரம்பரையாக ஆட்சி செய்தவர்களின் பெயர்ப் பட்டியலையும் கோணேசர் கல்வெட்டு விரிவாகத் தருகிறது. இவற்றில் மருங்கூர் வன்னிபம் 37 பேரும், சோழநாட்டு வன்னிபம் 31 பேரும், காரநகர் வன்னிபம் 42 பேரும் அடங்குவர். இக்குலங்கள் ஒவ்வொன்றும் கட்டுக்குளப்பற்று, தம்பலகாமப்பற்று, கொட்டியாரப்பற்று என்பவற்றை ஆட்சி புரிந்தனர். மேற்கூறிய வன்னிபங்களின் ஆட்சி பற்றிய ஆதாரங்களை ஆதாரப்படுத்தும் முக்கிய ஆவணங்களாக

1. பண்டைய நூல்கள்
2. கல்வெட்டுக்கள்
3. ஐரோப்பிய நிர்வாகிகளின் ஆவணங்கள்

என்பனவற்றைக் கூறலாம்.

இவற்றில் திருகோணமலை வன்னிபங்கள் பற்றிய ஆதாரங்களாகத் தரும் பண்டைய நூல்களில் முதன்மை பெறுவது கோணேசர் கல்வெட்டாகும். அத்துடன் யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல், வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுத காதல் ஆகிய நூல்களும் ஆதார ஆவணங்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. "கோணேசர் கல்வெட்டு" என்கின்ற வரலாற்று நூல் கவிராஜவரோதயன் அவர்களால் 16 ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. இது பாடல்களையும், உரைநடைப்பகுதிகளையும் கொண்டமைந்திருக்கிறது. அந்த நாட்களில் அரசர்கள் தங்களது திருப்பணிகள், கட்டளைகள் போன்றவற்றை சாசனங்களாகக் குறித்து வைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட சாசனத்தை ஆதாரமாகக்கொண்டு இலக்கியங்கள் உருவாக்கப்பட்டால் அது "கல்வெட்டு" என அழைக்கப்பட்டது.

திருக்கோணேச்சர ஆலயத்துக்கு திருப்பணிகள் செய்த குளக்கோட்டு மன்னன், ஆலயம் பற்றியும், அதனை நிர்வகிப்பது பற்றியும் கோயிற்றொழும்பாளர்கள் கடமைகள் பற்றிய செய்திகளையும் உள்ளடக்கி "பெரியவளமைபத்ததி" என்னும் செப்பேட்டில் பொறித்து வைத்திருந்தார். அச்சாசன விடயங்களை அடிப்படையாக வைத்து அதைத் தொகுத்தும், விரித்தும் கவிராஜவரோதயரால் உருவாக்கப் பட்டதுதான் கோணேசர் கல்வெட்டு. இந்நூல் மூலம் திருக்கோணேச்சரத்தின் வரலாறு, அவ்வாலயத்துக்கு குளக்கோட்டு மன்னன் செய்த திருப்பணிகள், அக்காலத்து திருகோணமலைச் சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்கள் என்பனவற்றுடன் திருகோணமலை வன்னிமைகள் பற்றிய விரிவான செய்திகளை அறியத்தருகிறது.

கோணேசர் கல்வெட்டைத் தொடர்ந்து திருகோணமலை வன்னிமைகள் பற்றிய தகவல்களைத் தரும் ஆவணமாக வையாபாடல் விளங்குகிறது. யாழ்ப்பாண செகராசசேகர அரசனின் அவை வித்துவானான வையாபுரி ஐயர் அவர்கள் 16ம் நூற்றாண்டில் இந்நூலினை இயற்றினார். வையாபாடலில் பல வன்னியர்களின் பெயர்கள் வருகின்றன. அவர்கள் சென்றிருந்த இடங்களும், கைப்பற்றிய இடங்களும் கூறப்படுகின்றன. அதில் சுபதிட்டா என்னும் அந்தணனும், படையும் திரியாய் என்னுமிடத்திற்குச் சென்று நீலப்பணிகனைக் கொன்று விட்டு அந்நிலத்தை ஆண்டனர் என்றும். அங்கசன் கட்டுக்குளத்திற்கும் , புகழ்மிக்க சிங்கவாகு திருக்கோணமலைக்கும், மாமுகன் என்பவன் வெருகல், தம்பலகாமம் ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றியாளச் சென்றார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.


வையாபாடலை மூலநூல்களில் ஒன்றாக் கொண்ட யாழ்ப்பாண வைபவமாலை 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மயில்வாகனப் புலவர் என்பவரால் இயற்றப்பட்ட நூலாகும். இது யாழ்ப்பாண அரசுடன் திருகோணமலை வன்னிமைகள் தொடர்புகளையும், சில காலங்களில் அவர்களின் ஆட்சி மேலாதிக்கத்தையும் ஏற்றிருந்ததையும் விபரிக்கின்றது.

தொடரும் ..

**வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்ளக் காதலி டாப்சி



முதலில் காதலர்களாகவும், பின்னர் தம்பதிகளாகவும் நடிக்கும் சிம்பு - நயன்தாரா, ஏற்கனவே உண்மையான காதலர்களாக இருந்து பிரிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்த படத்தில் நயன்தாராவை தவிர இன்னொரு நடிகையும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

சிம்பு-நயன்தாரா ஜோடியின் வாழ்க்கையை பிரிக்கும் கள்ளக்காதலி வேடத்தில் நடிக்கிறார் நடிகை டாப்சி. படத்தில் வெறும் பத்து நிமிடங்களே டாப்சியின் காட்சிகள் வருவதாகவும், அந்த கேரக்டர்தான் கதையின் திருப்புமுனைக்கு காரணமாக இருக்கும் கேரக்டர் என படக்குழுவினர் தெரிவித்து வருகின்றனர்.

## இரவில் லாரியில் தனித்து செல்றாரா??



சன்னிலியோன் ஆடுவதாக இருந்த ஒரு பாடலுக்கு இனியா ஒப்பந்தமாகியுள்ளார். சன்னிலியோன் கேட்ட சம்பளத்தை தயாரிப்பாளர் கொடுக்க தயங்கியதால்தான் இம் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சென்னை – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் இரவு நேரத்தில் அலங்கரிக்கப்பட்ட ஒரு லாரியில் இனியா மட்டும் தன்னந்தனியாக நடனம் அமைவது போன்ற காட்சிகளை படமாக்க இயக்குனர் கண்ணன் முடிவு செய்துள்ளார். இதற்கு அலங்கரிக்கப்பட்ட லாரி தயாராக இருப்பதாகவும், இன்னும் இரண்டு நாட்களில் இந்த பாடலில் படப்பிடிப்பு தொடங்கி மூன்று நாட்களில் இந்த பாடலின் படப்பிடிப்பை முடிக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

## திருமண நிபந்தனை -தமன்



காதலித்து தான் திருமணம் செய்ய வேண்டும் என்ற முடிவில் உறுதியாக இருக்கிறார், தமன்னா. பல நடிகைகள், தங்களது காதல் விவரங்களை ரகசியமாக வைத்திருக்கும் போது, “என் மனதுக்கு பிடித்த நபரை தேடி கொண்டிருக்கிறேன்” என, பகிரங்கமாக அறிவித்துள்ளார், தமன்னா. “என்னை கவர்ந்த நபர், இன்னும் என் கண்ணில் படவில்லை. அப்படிப்பட்ட நபரை, இப்போது சீரியசாக தேடி வருகிறேன். அறிமுகம் இல்லாத நபருக்கு கழுத்தை நீட்டுவதில் உடன்பாடில்லை. பல ஆண்டுகளாக பார்த்து, பழகி, காதலித்தவரையே திருமணம் செய்வது என்பதில் உறுதியாக இருக்கிறேன்” என்கிறார்.

## மனைவியால் தப்பிய ஸ்டாலின்



தமிழகத்தையே கலக்கிய ஒரு செய்தி உதயநிதி - நயன்தாரா காதல் விவகாரம் தான்.

ஒரு முன்னணி வார இதழ் இவர்களுக்கிடையே ஏற்பட்ட காதலால் தற்கொலை வரை சென்றதாக தெரிவித்திருந்தது. இந்நிலையில், உதயநிதியின் மனைவி கிருத்திகா மிகவும் கோபமுடன் ட்டுவிட்டரில் தன் கருத்தை தெரிவித்துள்ளார். இதில் 'ஊடகங்கள் மிகவும் கீழ்தரமாக நடந்துகொள்கின்றன, யாரும் என்னிடம் இது உண்மையா என்று கேட்டு, உங்கள் நேரத்தை வீணடிக்காதீர்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## சேரும் அசின் — சல்மான்



பலகோடி ரூபாய் மதிப்பில் நடிகை அசினுக்கு பாலிவுட் நடிகர் சல்மான்கான் சொந்த வீடு வாங்கி கொடுத்திருப்பதாக மும்பையில் தற்போது பலமான வதந்தி பரவி வருகின்றது. சல்மான்கான் மற்றும் அசின் ஆகிய இருவரும் “லண்டன் ட்ரீம்ஸ்” என்ற படத்தில் கடந்த 2009ஆம் ஆண்டு சேர்ந்து நடித்தபோது இருவருக்கும் நெருக்கம் ஏற்பட்டதாகவும் இருவரும் காதலிப்பதாகவும் கூறப்பட்டது. அப்போதே இந்த வதந்தியை இருவருமே மறுத்தனர். இந்நிலையில் தற்போது மீண்டும் இந்த வதந்தி மும்பை முழுவதும் கொழுந்துவிட்டு எரிகிறது.

தாயாருடன் தனியாக அந்த வீட்டில் வாழும் அசினை பார்க்க சல்மான்கான் அடிக்கடி வந்து செல்வதாகவும் அந்த வதந்தி கூறுகிறது.

## கவர்ச்சி இல்லையா! பதறிய சுனைனா



நடிகை சுனைனா “இனி குடும்ப பாங்கான வேடத்தில் தான் நடிப்பார், கவர்ச்சி வேடங்களில் நடிக்க மாட்டார்” என கோலிவுட்டில்காட்டுத் தீயாக செய்தி பரவ பதறி விட்டார் அவர்.

“ஏற்கனவே நீச்சல் உடையணிந்தது மட்டுமின்றி, முத்த காட்சிகளிலும் நடித்து விட்டேன். அதனால், முழுக்க நனைந்த பின், முக்காடு போட விரும்பவில்லை. மீண்டும் வாய்ப்பு கிடைத்தால், கவர்ச்சி வேடங்களில் நடிக்க தயாராக உள்ளேன்” என விளக்கம் கொடுத்துள்ளார் சுனைனா.

## நீ யார்? த்ரிஷா அதிர்ச்சி



படப்பிடிப்பு ஒன்றிற்காக ஐதராபாத் செல்வதற்காக சென்னை உள்நாட்டு விமான நிலையத்துக்கு த்ரிஷா சென்றார். பேன்ட், சட்டை மற்றும் கூலிங்கிளாஸ் அணிந்து மாடர்னாக இருந்த த்ரி'ா,விமான நிலையத்தின் உள்ளே பயணிகள் ஓய்வெடுக்கும் அறையில் உட்கார்ந்திருந்தார். அப்போது அங்கு வந்த மத்திய பாதுகாப்பு படை அதிகாரி ஒருவர் திரி'ா மேல் சந்தேகம் கொண்டு அவரை கேள்வி மேல் கேள்வி கேட்டு விசாரணை செய்தார். அவரை பார்த்து "நீங்கள் யார்? எங்கே போகிறீர்கள், எங்கிருந்து வருகிறீர்கள், என்று கேட்டதோடு அடையாள அட்டையை காட்டும் படியும் வற்புறுத்தினார்.

# சினிமுரசு

## சினிமா குறுஞ் செய்திகள்



- **டிரைலருக்கே வெற்றி விழா நடத்திய அஞ்சான்**

அஞ்சான் திரைப்படத்தின் பாடல் வெளியீட்டு விழா திடீரென ரத்து செய்யப்பட்டுவிட்டதாக படக்குழுவினர் தரப்பில் இருந்து அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- **ரஜினிகாந்த் திடீர் மயக்கம்**

ரஜினிகாந்த் சண்டைக்காட்சியில் நடித்துக் கொண்டிருக்கும் போது திடீரென மயக்கம் அடைந்து விட்டதாகவும், ஐதராபாத் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ள தாகவும் வதந்தி பரவியுள்ளது.

- **தமிழ் நடிகர்களை அவமானப்படுத்திய அனுஷ்கா**

ஒரு பேட்டியில் 'உங்களுக்கு பிடித்த நடிகர் யார்' என்று ஒரு இதழ் கேட்டுள்ளது. இதற்கு பதில் அளித்த அனுஷ்கா ஒரு தென்னிந்திய நடிகர்கள் பெயரையும் கூறவில்லை.

- **ஏ.ஆர்.முருகதாஸ் இயக்குனரா? இல்லை பைத்தியமா?**

வில்லனாக நடிக்க வரும் நடிகர்களிடம் அனைத்து இயக்குனர்களும் உடலை கட்டுக் வைத்துக்கொள்ள அறிவுறுத்துவார்கள். ஆனால் கத் படத்தில் நடிக்க தன்னை ஒல்லியாகும்படி இயக்குனர் கூறி போது “இவர் உண்மையிலேயே இயக்குனர்” என்றுதான் முதலில் நினைத்தேன் என்கிறார் கத்தி வில்லன் நீல்நிதின்

- **பிரபல நடிகைக்கு ஒருமணி நேரம் ட்ரீட்மெண்ட் கொடுத்த கமல்**

முதல்நாள் படப்பிடிப்பில் கமல் முன்னால் நடிப்பதற்கு பயந்து முதல் ஷாட்டிலேயே மயக்கமடைந்து விழுந்துவிட்டாராம். கமல் அவரை தனியாக கேரவனுக்கு அழைத்து சென்று அவருடைய பயத்தை போக்கியுள்ளார்.

- **ஜோடி சேரவுள்ள ஜெய்-த்ரிஷா**

புதிய படத்தில் கதாநாயகனாக நடிக்கும் ஜெய்க்கு ஜோடியாக நடிக்க த்ரி'ாவிடம் கேட்டபோது, த்ரி'ாவின் தயக்கமின்றி ஏப்புக்கொண்டதாக தகவல்கள் கூறுகின்றன.

- **சூப்பர் ஸ்டார் பட்டம்**

ஆகஸ்ட் 15ஆம் திகதி மதுரையில் ஒரு பிரமாண்ட விழாவை நடத்தி, அதில் விஜய்க்கு சூப்பர் ஸ்டார் பட்டம் வழங்க ஏற்பாடு நடைபெற்று வருவதாக பரபரப்பு செய்தி வெளியாகியுள்ளது.

- **முந்தைய காதலியிடம் ஆர்யா மீண்டும் நெருக்கம்**

நடிகர் ஆர்யா மீண்டும் நடிகை பூஜாவுடன் நெருக்கமாக இருப்பதாக கோலிவுட்டில் செய்தி பரவி வருகிறது

### திரை விமர்சனம்

## சைவம்



கிராமத்தில் தனது மூன்றாவது மகனுடன் நாசரும் அவரது மனைவியும் வாழ்ந்து வருகின்றனர். இவருடைய மீதி இரண்டு மகன்கள் சென்னையிலும், ஒரே ஒரு மகள் துபாயிலும் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் கிராமத்தில் நடக்கவிருக்கும் ஊர்த்திருவிழாவில் கலந்துகொள்ள பத்து நாட்களுக்கு முன்னரே வருகின்றனர். அந்த பத்து நாட்களில் நடக்கும் சம்பவங்கள்தான் “சைவம்” திரைப்படத்தின் கதை.

நாசரின் பேத்தி சாரா தனது வீட்டில் மிகவும் ஆசையாக ஆடு, கோழி மற்றும் சேவலை வளர்த்து வருகிறார். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயர் வைத்து வளர்த்து வரும் சாரா, சேவலுடன் மட்டும் மிகுந்த பாசத்தோடு இருப்பார். “பாப்பா” என்ற பெயர் கொண்ட அந்த சேவல் சாராவின் பள்ளிக்கும் தினமும் வந்துவிடும்.

இந்நிலையில் ஒருநாள் கோவிலுக்கு சென்றிருந்த வேளையில் எதிர்பாராத விதமாக சாராவின் பாவாடையில் தீப்பற்றி விடுகிறது. இதனால் நாசரின் குடும்பத்திற்கு சாமிக்குத்தம் ஏற்பட்டுள்ளது என்றும், அதை சரிசெய்ய வேண்டுமானால் நேர்த்திக்கடன் ஏதாவது பாக்கி இருக்கின்றதா? என்பதை யோசித்து அதை செலுத்திவிடும்படி பூசாரி கூறுகின்றார். குடும்பத்தினர் அனைவரும் என்ன நேர்த்திக்கடன் பாக்கி இருக்கின்றது என்று யோசிக்கும்போது, “சாரா வளர்த்து வரும் “பாப்பா” என்னும் சேவலை மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சாமிக்கு பலிகொடுப்பதாய் வேண்டியிருந்தது அனைவருக்கும் ஞாபகம் வருகிறது,. எனவே குடும்பத்தினர் அனைவரும் சேவலை பலிகொடுக்க முடிவு செய்கின்றனர்.

தான் ஆசையாய் வளர்த்த சேவலுக்கு ஆபத்து வருவது கண்டு அதிர்ச்சி அடையும் சாரா, சேவலை எப்படி காப்பாற்றுகிறார் என்பதுதான் மீதிக்கதை.




கிராமத்து பெரியவராக அலட்டிக்கொள்ளாத நடிப்பு நாசருக்கு. இவருடைய அனுபவம் இவருக்கு பெருமளவு கைகொடுக்கின்றது. படத்தின் உயிர்நாடியே சாராவின் நடிப்புதான். சேவலை மறைத்து வைத்து சாரா போடும் அபார நாடகம், ஊரில் இருந்து வந்த சிறுவனிடம் மாட்டிக்கொண்டு அவனை நைசாக தாஜா செய்யும் குறும்புத்தனம் என படம் முழுவதும் சாராவின் நடிப்பு மிக அருமை.

விஜய்யின் வழக்கமான மென்மையான திரைக்கதை, உணர்வுபூர்வ காட்சிகள் என படம் முழுவதும் இவர் கடுமையாக உழைத்திருப்பது தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதி மதி கொண்ட ரோபோ



எந்திரவியல் சாதன உற்பத்தியில் முன்னணியில் திகழும் ஜப்பான் நிறுவனமான ஹொண்டா Asimo ரோபோவினை அறிமுகம் செய்யவுள்ளது. இந்த வகை ரோபோவினை ஹொண்டா நிறுவனம் முதன் முதலில் 2000 ஆண்டின் பிற்பகுதியில் அறிமுகம் செய்திருந்தது.

அதன் பின்னர் 2003ம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகம் செய்திருந்தது. தற்போது புதிய வசதிகளை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த ரோபோவினை மீண்டும் ஐரோப்பிய நாடுகளிலேயே அறிமுகம் செய்யவுள்ளது. இதுவரை உருவாக்கப்பட்ட Asimo வகை ரோபோக்களில் இதுவே அதிகமான மதிநுட்டம் கொண்டதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


# பொய் பெயரையும் பாவிக்கலாம்



பேஸ்புக் மற்றும் டுவிட்டர் போன்ற சமூகவலைத்தளங்களில் கணக்கினை உருவாக்குவதற்கு பொதுவாக விரும்பிய பெயர்களை பயன்படுத்த முடியும். ஆனால் கூகுள் பிளஸில் உண்மையான பெயரையே பயன்படுத்தக்கூடியதாக காணப்பட்டது.

எனினும் தற்போது இந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு கூகுள் பிளஸ் கணக்கினை உருவாக்குவதற்கு விரும்பிய பெயரை பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கூகுள் பிளஸ் வலைத்தளப் பாவனையில் எதிர்வரும் காலங்களில் முன்னேற்றம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஸ்மார்ட் போனில் பழுதா



புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட OnePlus One ஸ்மார்ட் கைப்பேசியின் தொடுதிரையில் கோளாறுகள் காணப்படுவதாக பயனர்கள் முறையீடு செய்துள்ளனர். அதாவது தொடுதிரையின் கீழ்ப் பகுதியில் மஞ்சள் போன்ற இலேசான நிறம் தோன்றுவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.


எனினும் இதுவரையில் இந்த ஸ்மார்ட் கைப்பேசியினை தயாரித்த நிறுவனம் எந்தவிதமான பதிலையும் தெரிவிக்காத நிலையில், இதற்கான தீர்வு விரைவில் முன்வைக்கப்படும் என தொடர்ந்தும் பயனர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.

# விளையாட்டுப் பையன்

## கணனியின் வேகத்தை அதிகரிக்க!!

ஆரம்பத்தில் வேகமாக இயங்கிய கணணி சிறிது நாட்கள் தொடர்ந்து பயன்படுத்தும் போது மந்த கதியில் இயங்கலாம். இதற்கு பல காரணங்கள் இருப்பினும் பொதுவாக கணனியில் நிறுவும் மென்பொருள்கள் Start Up இல் சேர்க்கப்படுவதால் கணனியின் வேகத்தில் பெரிதும் பாதிப்பு ஏற்படுகின்றது.

அதாவது கணனியில் நிறுவும் பெரும்பாலான மென்பொருள்கள் கணணி தொடங்கும் போது அதனுடன் இணைந்தவாறு செயற்பட தொடங்குகின்றது. எனவே கணணி தொடங்குவதற்கே அதிக நேரம் எடுத்துக் கொள்கின்றது.



எனவே இது போன்ற மென்பொருள்கள் கணணி தொடக்கத்தின் போது தொடங்குவதனை நிறுத்திவிட்டால் கணனியின் வேகத்தில் முன்னேற்றத்தை காணலாம்.

- இதற்கு Run சென்று msconfig என தட்டச்சு செய்க.
- பின் திறக்கப்படும் சாளரத்தில் Startup எனும் Tab இனை சுட்டுக
- இனி அதில் கணணி தொடக்கத்தில் தொடங்கும் மென்பொருள்களின் பட்டியல் தரப்பட்டிருக்கும்.
- அதில் தேவையற்ற மென்பொருள்களுக்கு முன்னே இருக்கும் Tick அடையாளத்தினை நீக்கி விட்டு Apply செய்து Ok செய்யவும்.

## PDF Eraser



PDF கோப்பு ஒன்றில் காணப்படும் அநாவசியமான படங்கள், எழுத்துக்களை நீக்குவதற்கு PDF Eraser எனும் மென்பொருள் பயனுள்ளதாக காணப்படுகின்றது. விண்டோஸ் இயங்குதளங்களில் பயன்படுத்தக்கூடிய இந்த இலவச மென் பொருளினைக் கொண்டு இரண்டே இரண்டு படிமுறைகளில் Text, Images, Logos மற்றும் தேவையற்ற பகுதிகளை Delete அல்லது Erase செய்ய முடியும். இவை தவிர எழுத்துக்கள், படங்களை உட்புகுத்தவும் முடிவதுடன், தவறான திசைகளில் காணப்படும் PDF பக்கங்களை திருப்பிக்கொள்ள (Rotate) முடியும்.

# கூகுளின் கொன்டாக் லென்ஸ்

கூகுள் நிறுவனம், சுவிட்ஸர்லாந்தினைச் சேர்ந்த மருந்து நிறுவனமான Novartis AG's Alcon உடன் இணைந்து ஸ்மார்ட் கன்டாக்ட் லென்ஸினை உருவாக்கவுள்ளது.

இந்த லென்ஸ்ஸானது உடல் ஆரோக்கியத்தினை கண்காணிக்க உதவும் வகையில் வடிவமைக்கப்படவுள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இந்த லென்ஸ் உணரி (Antenna), கப்பாசிட்டர், கன்ட்ரோலர், சென்சார் ஆகியவற்றினை உள்ளடக்கியதாக காணப் படுகின்றது.



எனினும் இந்த லென்ஸ் நுகர்வோரின் பாவனைக்கு வருவதற்கு 5 வருடங்கள் வரை எடுக்கும் என கூகுள் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

# $400 களில் டேப்லட்




Google Nexus 8 எனும் டேப்லட்டினை கூகுள் நிறுவனத்திற்காக HTC நிறுவனம் தயாரித்து வருவது தொடர்பில் ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்நிலையில் விரைவில் அறிமுகம் செய்யப் படவுள்ள இந்த டேப்லட் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி 8.9 அங்கு அளவு, 2560 x 1600 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்ட இந்த டேப்லட் ஆனது 64-bit NVIDIA Tegra K1 Processor, பிரதான நினைவகமாக 2GB RAM என்பனவற்றுடன் சேமிப்பு நினைவகமாக 16GB, 32GB மற்றும் 64GB ஆகியவற்றினை உள்ளடக்கியுள்ளது.

மேலும் அன்ரோயிட் 5.0 இயங்குதளத்துடன் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படும் இச்சாதனத்தின் பெறுமதி 400 டொலர்கள் வரையில் இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# கோளாறும் தீர்வும்

கணனியில் பிரதான நினைவகத்தின் (RAM) பயன்பாடானது இன்றியமையாததாக காணப்படுகின்றது. இந்நிலையில் கணனியில் நிறுவப்பட்டுள்ள பிரதான நினைவகம் சரியான முறையில் தொழிற்படுகின்றதா என்பதை சரிபார்ப்பதற்கு MemTest எனும் மென்பொருள் உதவுகின்றது. இம்மென்பொருளை தரவிறக்கம் செய்து கணினியில் நிறுவிய பின்னர் கணினியில் இயங்கிக்கொண்டிருக்கும் அனைத்து வகையான புரோகிராம்களையும் நிறுத்த வேண்டும்.



அதன் பின்னர் குறித்த மென்பொருளில் OK என்பதை கிளிக் செய்து தொடர்ந்து Start Testing என்பதை கிளிக் செய்ய வேண்டும். குறைந்தது 20 நிமிடங்கள் வரை நீடித்த பின்னரே பிரதான நினைவகம் தொடர்பான பிரச்சினைகள், தகவல்கள் வெளியாகும்.

# ஒரு கொலையின் கதை

மாயன்

கொலையின் கதை பாகம் 3 எதிர்வரும் வாரம் முதல் ஆரம்பமாகும்

# உலகை அச்சுறுத்தும் "அல்கான்சா"

## ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் மகளிர் படை

சிரியாவில் பெண்களை கண்காணிப்பதற்காக ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தில் அமைக்கப்பட்ட பெண்கள் படை அந்நாட்டை அச்சுறுத்தி வருகின்றது.

சிரியாவில் இஸ்லாமிய சட்டத்தினை பெண்கள் கடைபிடிக்கின்றார்களா? என்பதை கண்காணிக்க ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு "அல்கான்சா" என்ற பெண்கள் படையினை கடந்த மாதம் சிரியாவை கைபற்றிய பின்பு உருவாக்கியுள்ளது.

இஸ்லாமியத்தை முழுமையாக பெண்கள் கடைபிடிக்க விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அப்படி கடைபிடிக்காத பெண்களை கைது செய்து தண்டித்தல் உள்ளிட்டவை இந்த படையணிகளின் பணிகளாகும்.

சிரியாவின் இதர பகுதிகளில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தில் ஜிகாதிகளின் மனைவியரோ அல்லது ரக்கா நகரைச் சேர்ந்த பெண்களோ இதில் இணைந்து கொள்ளலாம் என ஐ.எஸ்.ஐ.எஸ். யின் தளபதிகளில் ஒருவரான அபு அகமது அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில் அண்மையில் இந்த படையணியால் கைது செய்யப்பட்ட ஜைனாப் என்ற இளம்பெண் கூறியதாவது , நான் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, திடீரென வாகனத்தில் வந்த ஆயுதமேந்திய இந்த அமைப்பின் பெண்கள் என்னை சுற்றி வளைத்து கைது செய்தனர்.

இதன்பின் அவர்களது இடத்துக்கு கொண்டு சென்று, அறை ஒன்று அடைத்து வைத்து, என்னிடம் இஸ்லாமிய வழிபாடு, நோன்பு குறித்து கேள்விகளை துப்பாக்கி முனையில் கேட்டுள்ளனர் மேலும் தெருவில் தனியாக நடந்து சென்றதாலும், இஸ்லாம் பெண்களுக்குரிய உடையை முறையாக அணியாத காரணத்தாலுமே என்னை கைது செய்ததாக கூறி என்னை எச்சரித்து விடுதலை செய்துள்ளனர் என கூறியுள்ளார்.

இந்த அமைப்பை எதிர்த்து மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் -09 நிகழ்காலத்தில் வாழ்தல்



(வி.என்.சந்திரகாந்தி)

வெளிநாட்டில் பிறந்து வளர்ந்த தமது பதின்மூன்று வயதேயான மகளுக்கு தாம் பிறந்த ஊரைக்காட்ட வேண்டும் என்ற ஆர்வத்தில் பெற்றோர் அவளை இந் நாட்டுக்கு அழைத்து வந்தனர். 'வான்' ஒன்றை வாடகைக்கு அமர்த்தி வடக்கு கிழக்கில் அவரது உறவினர்கள் எங்கெல்லாம் தங்கியிருக் கிறார்களோ அங்கெல்லாம் அழைத்துச் சென்றார்கள். அந்தச் சிறுமியும் உறவினர்கள் அனைவரையும் ஆர்வத்துடன் சந்தித்து அவர்கள் மீதான தனது பாசத்தை பரிமாறிக் கொண்டாள். விடுமுறை முடிவடைந்து வெளிநாடு திரும்புவதற்காக விமான நிலையத்தில் நின்ற போது அச் சிறுமி பெற்றோரிடம் கேட்ட கேள்வி! உங்களுடைய உறவினர்கள் எல்லாம் ஏன் கவலை தோய்ந்த முகத்துடன் இருக்கின்றார்கள்?" என்பதே!

உண்மை அதுதான்! எமக்கு அது விளங்குவதில்லை. அதற்கு காரணம் நாமும் அதே நிலைக்கு உட்பட்டிருப்பதுதான்! எமது பெரும் தவறே கடந்த காலத்தில் வாழ்வதுதான்! எமது வாழ்க்கையில் நாம் பல தவறுகளை இழைத்திருப்போம், பல தோல்விகளை சந்தித்திருப்போம், பல துன்பங்களை அனுபவித்திருப்போம்.... தொடர்ச்சியான எண்ண அலைகள் தான் மனமாக உருவெடுக்கின்றது.....

நாம் கடந்த காலத்தின் துன்ப அனுபவங்களை நினைத்துக் கொண்டிருந்தால் எமது மனமும் அதைச் சார்ந்துதான் இருக்கும். அதன் தொடர்ச்சியாக அகத்தில் உள்ளது முகத்தில் தெரியும்! சரி..... அந்த தவறை சரிசெய்து கொண்டு வாழ்க்கையில் முன்னேறுவோம் என்று உறுதி எடுத்தால், எமது உறவுகளும் நட்புகளும் தமது நிலைப்பாட்டிலிருந்து மாறாது...! நீ என்னை அப்படியெல்லாம் பழிவாங்கினாய் தானே! நான் கேட்டும் உதவி செய்ய மறுத்தாய் தானே! என்றெல்லாம் எமக்கு பழைய சம்பவங்களை நினைவூட்டிக் கொண்டே இருப்பார்கள்! பாருங்கள், எமது வாழ்க்கை நீருக்குள்ளால் நெருப்பைக் கொண்டு போவது போல் அல்லவா இருக்கின்றது!

என்றாலும் எல்லாமே எமது கையில்தான் இருக்கின்றது. கடந்த கால சம்பவங்களைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருப்பதை அறவே நிறுத்தி அவற்றை அனுபவங்களாகவும் எமது வெற்றிக்கான படிக்கட்டுக்களாகவும் கொள்ள வேண்டும்.

எமது அடுத்த தவறு எதிர்காலம் பற்றிய கவலைகளாகும். எனது எதிர்காலத்தை என்னால் எப்படி நல்லபடியாக உருவாக்கிக்கொள்ள முடியும்? எனது பெற்றோரை எப்படி பராமரிப்பேன்? எனது பணமுடையை எப்படி சமாளிப்பேன் எதிர்காலத்தில் எனக்கு உதவி செய்ய யார் உளர்? இப்படியெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் கூட எமது மனம் இடிந்து சோர்ந்து விடும். அந்த மனத்தை வைத்துக் கொண்டு எதைத்தான் சாதிக்க முடியும்? எமது வெளிநாட்டு உறவுகளை எடுத்துக் கொள்வோம். அவர்கள் வாழ்க்கை எவ்வாறான வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றது! கணவன் வேலையால் வீடு திரும்பினால் மனைவி வேலைக்கு ஓடுகிறாள். பிள்ளைகள் பாடசாலை விட்டு வீடு திரும்பினால் பெற்றோர் வீட்டில் இல்லை. தாமே தத்தம் காரியங்களை செய்ய வேண்டும். கடந்த காலத்தைப் பற்றியோ எதிர்காலத்தைப்பற்றியோ சிந்திக்க அவர்களுக்கு நேரம் இல்லை! அப்படி சிந்தித்தால் எதிரே வரும் வாகனத்தில் தலை போய்விடும். அல்லது இரயில்வே தண்டவாளத்தில் உடல் சிக்கிக் கொள்ளும்! அப்படியெல்லாம் நேராமல் அவர்கள் வெற்றி கரமாக தமது வாழ்க்கையை முன்னெடுக்கிறார்கள்! அங்குதான் நீங்கள் ஒரு உண்மையை புரிந்து கொள்ள வேண்டும்! அவர்கள் கடந்தகால சிந்தனைகளில் மூழ்காமலும் எதிர் காலத்தை முன்னிட்ட கவலைகளில் தோயாமலும் நிகழ்காலத்தில் வாழ்கிறார்கள்.

ரமணமகரிஷி பற்றி அறியாதவர்கள் இருப்பது அரிதிலும் அரிது. பெற்றோர்கள், தமது குழந்தைச் செல்வங்களுக்கு அவருடைய வரலாற்றையும் சாதனைகளையும் பற்றி அவசியம் கூற வேண்டும்.

ரமணமகரிஷி தனது 17 வயதில் திருவண்ணா மலையில் அமைந்துள்ள அருணேஸ்வரர் ஆலயத்திற்கு புறப்பட ஆயத்தமானார். அவரது பெற்றோர் சகோதர சகோதரிகள் அவர் துறவறம் புறப்படுவதை விரும்பமாட்டார்களாதலின் தனது பயணத்தை இரகசியமாகவே வைத்துக் கொண்டார். தனது தமையனாரிடம் தான் ஒரு விசேட வகுப்புக்கு செல்வதாக கூறினார். தமையனாரும் அவரிடம் ஐந்து ரூபாவை கொடுத்து பாடசாலையில் தனது கட்டணத்தை செலுத்தும்படி கேட்டுக்கொண்டார். அவரும் பயணச்செலவுக்கு மூன்று ரூபா போதுமானதென கருதி மிகுதியையும் 'தன்னைத் தேட வேண்டாம்' எனும் ஒரு கைத்துண்டையும் விட்டுச் சென்றார். அவர் அருணேஸ்வரர் ஆலயத்திற்கு சென்றடைந்தபோது மீதி இருந்த பணம் தனக்கு அவசியப்படாது என தீர்மானித்து அதனை ஆற்றில் வீசி எறிந்தார். கடந்த மற்றும் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாத அந்த மகானைத்தான் பாரததேச அனைத்து மதத்தினரும் வெளிநாட்டவர்களும் தெய்வமாக வணங்கினர்!

## தேசிய SMS செய்திகள்

- **மோதல்கள் இடம்பெறும் இஸ்ரேல் மற்றும் காஸாவிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு**

காஸாவில் ஏற்பட்டுள்ள யுத்த சூழலுக்கு மத்தியில் இஸ்ரேலிலுள்ள இலங்கை பணியாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கின்றது.

- **யாழ்ப்பாணத்தில் 11 வயது சிறுமி துஷ்பிரயோகம்**

யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேசத்தில் 11வயதான சிறுமி பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பிலான சந்தேக நபரை கைது செயவதற்கான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

- **ஐ.தே.க விஜயத்தின் பின் சுபுகஸ்கந்தையில் பதற்றம்**

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் குழுவொன்று குறித்த பகுதிக்கு விஜயம் செய்தபோது, அங்குள்ள ஊழியர்களால் அவர்கள் தடுக்கப்பட்டதை அடுத்தே பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

- **அமைச்சரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்**

க.பொ.த சாதாரண தரத்தில் கணித பாடத்தில் சித்தி பெறாத மாணவர்கள் இரண்டு வருடங்களுக்குள் அப்பாடத்திற்குத் தோற்றி சித்தியடைய வேண்டும் என்ற பந்துலவின் யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

- **ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர்கள் நியமனம்**

ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி மூன்று நிபுணர்களை நியமித்துள்ளார். இந்த குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி சேர் டெஸ்மன்ட் டி சில்வா நியமிக்கப் பட்டுள்ளதாக ஜனாதிபதிப் பேச்சாளர் மற்றும் சர்வதேச ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **கணவனின் தாக்குதலில் மனைவி படுகாயம். தாய் பலி**

அனுராதபுரத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் கொலை செய்யப் பட்டுள்ளார். குறித்த பெண் தனது தாயுடன் வீதியால் சென்று கொண்டிருந்த வேளை, அங்கு வந்த கணவர் உள்ளிட்ட இருவர் இவர்களைத் தாக்கியுள்ளனர். இதன்போது 48 வயதான பெண்ணொருவரே பலியாகியுள்ளதோடு, அவரது 28 வயதான மகள் படுகாயமடைந்துள்ளார்.

- **காணாமற்போயிருந்த வெள்ளை நாகம் மீட்பு**

காணாமற்போயிருந்த வெள்ளை நாகம் தலையணை உறைக்குள் கட்டப்பட்ட நிலையில் தெஹிவளை மிருகக்காட்சிசாலையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

- **ஊவா மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்படவுமில்லை அதிகரிக்கப்படவுமில்லை**

நிறைவேற்றப்பட்ட சட்ட மூலகத்திற்கு அமையவும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அமையவும் பூமியின் பரப்பளவு சனத்தொகைக்கு அமையவே உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இதனை தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. அதனை மீறி எம்மால் எதனையும் செய்ய முடியாது என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

- **நான் பதவி விலகமாட்டேன் வடக்கு முதல்வர்**

இலங்கை அரசாங்கம் வடமாகாண முதலமைச்சர் பதவி விலகவேண்டும் என எதிர்பார்க்கிறது. ஆனால், வட மாகாண மக்களும் அந்த மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் என்னை பதவி விலகுமாறு கூறும் வரையில் நான் பதவி விலகப்போவதில்லை என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்..

- **சர்வதேச நிபுணர் குழுவின் பொருத்தமற்ற ஆலோசனை-களை நாம் நிராகரிப்போம்**

காணாமல் போனோர் தொடர்பாக விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கவே சர்வதேச நிபுணர்கள் மூவர் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நிபுணர்களின் ஆலோசனைகளில் தகுதியானவை மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்..

- **வெட்டப்பட்ட மரம் வீழ்ந்ததால் அதி சக்தி கொண்ட டிரான்ஸ்போமர் வெடித்துச் சிதறியது**

நுவரெலியா மஸ்கெலியா பிரவுண்ஸ்வீக் தோட்டத்தில் அருகிலிருந்த வெட்டப்பட்ட மரமொன்று வீழ்ந்து 33 அதிக மின் வலு கொண்ட டிரான்ஸ்போமர் ஒன்று வெடித்துச் சிதறியதால் அந்தப் பிரதேசத்துக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவத்தால் மின்சார சபைக்கு 2 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## குறுக்கெழுத்து புதிர் 018

முடிவுத் திகதி : 25.07.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 12 | | ■ | 13 | 2 | 14 | |
| | ■ | 3 | | | | | | ■ |
| | ■ | | ■ | ■ | | 4 | | |
| 5 | | 15 | | | 16 அ | ■ | 6 | |
| 7 | | | ன் | 17 | | | | 18 |
| | 19 | | ■ | | | 20 | | |
| ட | | | ■ | | ■ | ய் | | |
| | | | ■ | | ■ | 8 | | |
| 9 | | | 10 | | 11 | | | |

### மேலிருந்து கீழாக

1. நல்ல மணம்
2. வெட்டிப்பேச்சும் அடிதடியும்
5. இந்தியாவின் மன்னர் பரம்பரைகளில் ஒன்று
12. தொழிலின் பெயர்
13. ஆகாயம்
14. சூதாட்டத்தில் தலைசிறந்தவன்
15. மரணத்தின் பின் அடைய விரும்புவது
16. இரத்தம் குடிக்கும்
17. கரும்பலகையின் எழுத்தாணி
18. ஆசீர்வதிக்கும் அரிசியும் மஞ்சளும் சேர்ந்த கலவை
19. ஊடலின் பின் வரும்
20. அன்னை பூமியை இப்படியும் அழைக்கலாம்

### இடமிருந்து வலமாக

1. விற்று வாங்குதலைக் குறிக்கும்
2. ஆட்கொள்ளப்படுதல்
3. தலை வணங்காக் குணம்
4. சிறு குரவியில் பெயர்
5. அள்ள அள்ளக் குறையாதது - குழம்பியுள்ளது
6. ஒரு பக்கம் மட்டும் கடல் சேர்ந்த இடம்
7. ஆண் இனத்தைக் குறிக்கும் சொல்
8. வேலையற்று இருப்பவன்
9. பாகிஸ்தானிய நகரம்
10. செருக்கு
11. வயிற்றின் உதவியுடன் வாசிக்கும் வாத்தியம்
12. அடிக்கப் பயன்படும்
13. ஆயர்பாடியின் அழகன்

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஜ. கடற்கரைக்காட்சி வீதி. திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

### குறுக்கெழுத்து புதிர் 017 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ல | க | ம் | 2 அ | லா | வு | தீ | ன் |
| ண் | ■ | 3 அ | ரு | ச் | 17 சு | ன | ன் | ■ |
| 4 மை | 18 ய | ல் | ■ | 5 அ | ப | த் | த | 19 ம் |
| 6 ட | ட் | 20 வா | ம் | 7 ர | ம் | பை | ■ | ர |
| 8 தி | ச | ழ் | ■ | வ | ■ | 9 க | ள | வு |
| ■ | ன் | வா | ■ | 10 ம் | ர | வ | ■ | ன |
| 11 த் | தா | 12 தா | ந் | தா | 21 ம | 13 லை | த | 22 ம |
| 14 வா | ண | ர | ம் | ■ | ச் | ■ | ல் | ட |
| 15 து | லா | ம் | ■ | ■ | 16 [illegible] | ன | ண | ம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. இன்று செவ்வாய்க் கிழமை. நாளை மறுதினம் 30ஆம் திகதியாகும். சென்ற சனிக்கிழமை அனுலா தனது 10 வது பிறந்த தினத்தை கொண்டாடியதாக நேற்று கூறினாள். அனுலா தனது பிறந்த தினத்தை கொண்டாடிய திகதி என்ன?
1. 24 2. 25 3. 26

02. 100கிராம் உடைய 20 தேயிலைப் பைக்கற்றுக்களின் நிறை யாது?
1. 200கிராம் 2. 2கி.கி 3. 20000கிராம்

03. 1. கிராமப்புறங்களில் மக்களுக்கு அடிக்கடி செங்கண்மாரி நோய் பரவியது. இந்நோய் பரவுவதற்கு முக்கிய காரணம் யாது?
1. கிராமப்புறங்களில் வைத்தியசாலை இல்லாமை
2. நீரைக் கொதிக்க வைத்து பருகும் பழக்கம் இல்லாமை
3. கிராம மக்களுக்கு கல்வியறிவு குறைவு

04. "சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது" என்பதன் பொருள்?
1. சூடு அதிகமுள்ள இடங்களை பூனை விரும்புவதில்லை
2. அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்
3. எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்

05. தேவியின் ஒரே மகளாகிய நிஷா, அக்காவுடன் கோயிலுக்கு சென்றமையால், பாடசாலைக்கு வரவில்லை எனக் கூறினாள். இது உண்மையாக இருப்பதற்கான காரணம்?
1. நிஷாவுக்கு கோயிலுக்கு செல்ல விருப்பம்
2. நிஷாவுக்கு பாடசாலை செல்ல விருப்பமில்லை
3. நிஷாவின் பெரியம்மாவின் மகளும் ஒரே வீட்டில் வசித்தாள்.

06. "அற்பமான பொருளானது சிலவேளை பயன் தரும்" என்ற கருத்தை தரும் பழமொழி எது?
1. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
2. விளையும் பயிரை முளையில் தெரியும்
3. சிறு துரும்பும் பற்குத்த உதவும்

07. கீழ் உள்ள தாவரங்களில் தண்டில் காய்க்கும் தாவரம் எது?
1. கொய்யா 2. விளிம்பி 3. வேம்பு

08. இலங்கையின் பாரம்பரிய கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்யும் இடம்?
1. ஜனகலாகேத்திரம் 2. சலுசல 3. ஒசுசல

09. கீழ் உள்ள பூக்களில் நறுமணம் வீசுவது எது?
1. காட்டு மல்லிகை 2. வாடாமல்லிகை 3. மல்லிகை

10. கீழ் உள்ள மாவட்டங்களில் நிலப்பரப்பில் சிறிய மாவட்டம் எது?
1. கொழும்பு 2. கண்டி 3. யாழ்ப்பாணம்

11. பல்வலி ஏற்படும் போது பல்வலியைக் குறைக்க கிராமப் புறங்களில் கைமருந்தாகப் பயன்படுத்தப்படும் தாவரம்?
1. கற்றாளை 2. வேம்பு 3. ஆல்

12. வனைதல் சக்சரம் பயன்படுத்தப்படும் தொழில் எது?
1. உழவுத்தொழில் 2. சுரங்கத் தொழில் 3. மட்பாண்டத்தொழில்

13. கத்தரி, மிளகாய் போன்ற பயிர்களுக்கு சேதம் விளைவிப்பது?
1. நீள்மூஞ்சி வண்டு 2. லேடிபேட் வண்டு 3. மீலி மூட்டுப் பூச்சி

14. இராட்சதப் புல் என அழைக்கப்படும் தாவரம் எது?
1. கோரை 2. கடுபுல் 3. மூங்கில்

கீழுள்ள தகவல்களைக் கொண்டு 15, 16 ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | | |
|---|---|---|---|
| சீனி 250கி | - ரூபா 28 | துணி 1மீ | - ரூபா 80 |
| கோதுமை மா 500 கி | - ரூபா 32 | வர்ண நாடா 1மீ | - ரூபா 108 |

15. 1.25கிலோ கிராம் சீனியினதும், 750 சென்ரிமீற்றர் துணியினதும் மொத்த விலை யாது?
1. ரூபா 312 2. ரூபா 740 3. ரூபா 200

16. 50செ.மீ நீளமான துணிக்கு 1.5மீ வர்ண நாடா தேவைப்படின், 3.25மீ துணிக்குத் தேவையான வர்ண நாடாவை வாங்குவதற்கு தேவையான பணம் எவ்வளவு?
1. 9.75 2. 1053 3. 526.50

17. ரேகா என்பவள் ரூ 2 முத்திரைகளையும் ரூ 3 முத்திரைகளையும் சம எண்ணிக்கையில் வாங்கினாள். இம்முத்திரைகளின் மொத்தப் பெறுமானம் ரூபா 100 எனின், அவள் வாங்கிய முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை?
1. 40 2. 30 3. 50

18. 40 வினாக்கள் உள்ள வினாத்தாளில் ஒரு வினாவிற்கு சரியான விடையளித்தாள் 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். பிழையான விடை ஒன்றிற்கு 1 புள்ளி குறைக்கப்படும். 40 வினாக்களிற்கும் விடையளித்த குமார் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளி 35 ஆகும். அவரின் சரியான விடைகள் எத்தனை?
1. 35 2. 20 3. 25



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## நிலைமையை புரிதல்

குட்டிக் கதை

ஒரு புத்த மடாலயத் தலைவர் மிகவும் கவலையில் இருந்தார். ஒரு காலத்தில் அவரது மடாலயம் அந்தப் பகுதியிலேயே சிறப்பும் மதிப்பும் பெற்று விளங்கிய ஆலயம். தற்போது மதிப்புக் குறைந்து பாதாளத்திற்குப் போய்க் கொண்டிருந்தது அவருக்குத் தெளிவாக விளங்கியது. மடத்தின் உள்ளேயே பிக்குக்கள் யாரும் ஒருவரை ஒருவர் மதிக்காமல் தன்னிச்சையாகச் செயல் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொறுக்க இயலாமல் ஒரு நாள் நம் தலைவர் தன்னை விட அனுபவத்தில் சிறந்த ஒரு குருவைத் தேடிப் போனார். தன் பிரச்சினையை எடுத்துச் சொன்னார்.


அந்தக் குருவும் சற்று நேரம் ஆழ்ந்து யோசித்து விட்டு பிறகு "உங்கள் மடத்தில் புத்தரே வந்து தங்கியிருக்கிறார். நீங்கள் எவரும் அவரைக் கண்டு கொள்ளவும் இல்லை. மதிக்கவும் இல்லை. பின் எப்படி சிறப்பு செழிக்கும்?" என்று கேட்டார்.




இதைக் கேட்ட நம் தலைவர் வியப்பு மாறாமலே மடத்திற்குத் திரும்ப வந்து அங்கே இருந்த புத்த பிக்குக்களுக்கு விபரம் சொன்னார். அவர்களுக்கும் ஆச்சரியம். அந்தக் கணத்தில் இருந்து சுற்றியிருப்பவர்களில் ஒருவர் கடவுளாக இருக்கக் கூடும் என்ற அனுமானத்தில் எல்லோரையும் பணிவாகவும், அன்பாகவும், மிகுந்த மரியாதையுடனும் ஒவ்வொருவரும் அணுகினார்கள். நாளடைவில் மடத்தின் சிறப்பு பல மடங்கு உயர்ந்து போனது என்பதைச் சொல்லத் தேவையே இல்லை! கூடிச் செயல் படும் போது கொடுத்துப் பெறுதல் அவசியமான ஒரு சூட்சுமம் ஆகும்.

– சேர்ந்து செயல்படும் போது கொடுத்துப் பெறுதல் அவசியம் –

**எத்தனை சதுரங்கள் காணப்படுகின்றன?**



**எத்தனை மிருகங்கள் காணப்படுகின்றன?**




## சிந்திக்க .. ..

நம்மிடம் எதுவும் இல்லை என்று நினைப்பது : ஞானம்
நம்மைத்தவிர எதுவும் இல்லை என்று நினைப்பது : ஆணவம்!

## பாருங்கள்!

– தாமரைத்தீவான் –
(ஈச்சந்தீவு, கிண்ணியா)

எந்தன் தம்பி - தங்கையே,
எழுந்து வந்து பாருங்கள்!
அந்தி வானம் பாருங்கள்,
அதன் நிறத்தைப் பாருங்கள்!

வட்டக்கதிரைப் பாருங்கள்,
வளைவு மலையைப் பாருங்கள்!
முட்டும் முகிலைப் பாருங்கள்,
மூடும் விதத்தைப் பாருங்கள்!

பறவைக் கூட்டம் பாருங்கள்,
பாடும் பாடல் கேளுங்கள்!
கறவை மாட்டைப் பாருங்கள்,
கன்றின் துள்ளல் பாருங்கள்!

வெள்ளை மதியைப் பாருங்கள்,
வெளிச்சம் தன்னைப் பாருங்கள்!
புள்ளிக் கூட்டம் பாருங்கள்,
போதும் போவம் வாருங்கள்!



## சிறுவர் முரசு



## Grammar

Use the continuous for something that is happening at or around the time of speaking. The action is not finished.
Eg: The water is boiling. Can you turn it off?
I am going to bed now. Goodnight!
Use the simple for things in general or things that happen repeatedly. Eg:
It doesn't rain very much in summer.
My parents live in Colombo. They have lived there all their lives.
Ex: 1. Jim is very untidy. He .......... (always/ leave) his things all over the place.
2. Let's go out. It ............(not/ rain) now.

Read the note from your friend.
Write a note to her and answer her questions.
Im having a party at my house on Saturday.Can you come? Would you like to bring a friend? What do you like doing at parties?
Kani

## நற் பழக்கங்கள்

ஒரு குழந்தையையும் மற்றொரு குழந்தையையும் வித்தியாசப்படுத்திப் பார்க்காதீர்கள். முழுமையான நேர்மை என்பது குணநலன்களில் முதுகெலும்பு போன்று முக்கியமானது. உண்மைக்கு எப்போதும் உயர்வு உண்டு. அதனைப் பின்பற்றுவதால் ஒரு நல்லொழுக்க சீலர் ஆக முடியும்.

நீதி என்பது நாம் கடைப்பிடிக்க வேண்டியது. நாம் எப்படி செயலாக்கம் செய்கிறோம், நாம் என்ன செய்கிறோம், எப்படிச் செய்கிறோம், எப்படி நமது மனசாட்சியை நீதியான முறையில் நடப்பதற்குப் பயன்படுத்துகிறோம் என்பது பற்றியது. அன்புடன் இரு. பொறாமைப்படாதே. தற்பெருமை கொள்ளாதே! அன்பானது கருணையும் பொறுமையும் கொண்டது. குழந்தைகள் ஒருவரையொருவர் நேசித்து அன்புடன் பழக வேண்டும். நம்பிக்கை எப்போதும் வீண்போவதில்லை, நம்பிக்கையோடு இருங்கள், நம்பிக்கையும் திட நம்பிக்கையும் ஒருவரை எல்லோருடனும் நன்கு பழக வைக்கிறது. குழந்தைகளுக்கு தன்னிச்சைப்படி செய்ய சுதந்திரம் கொடுங்கள். அன்பும் சுதந்திரமும் இணைந்தே செல்லும்.

சுயக்கட்டுப்பாடு என்பது ஓர் கொள்கை. ஒருவர் தன் வாழ்க்கை குறிக்கோளை அடைய, தனது சிந்தனைகளை உருவாக்க இது உதவும் என்று நெப்போலியன் ஹில் என்பவர் கூறுகிறார். சுயக்கட்டுப்பாடுதான், தன்னை கட்டுப்படுத்தவும், சுயமதிப்பின் அடித்தளமாகவும் அமையும். தொடரும்.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி


## பாடம் : கணிதம்

1. 8% பங்குலாபம் வழங்கும் கம்பனி ஒன்றின் ரூபா 8 பங்குகளை 25% சமத்திலும் கூடிய விலையில் வாங்குவதற்கு குமணன் 11000 ரூபாவை முதலீடு செய்தார்.
(i) ஒரு பங்கை வாங்கிய விலை என்ன?
(ii) பங்குலாபம் என்ன?

2. (i) $(x+{}^{1}/_{x})^2$ இன் விரிவை எழுதுக.
(ii) $x^3+({}^{1}/_{x})^3$ ஐ காரணிப்படுத்துக.
(iii) $x+{}^{1}/_{x}=3$ எனின், $x^2+({}^{1}/_{x})^2$, $x^3+({}^{1}/_{x})^3$ என்பவற்றின் பெறுமானத்தைக் காண்க.


3. $y=(x-3)^2$ என்னும் வரைபில் ,
(i) சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?
(ii) இழிவுப் பெறுமானம் யாது?
(iii) திரும்பற்புள்ளியை காண்க.
(iv) $y+5=(x-3)^2$ என்னும் வரைபின் இழிவுப் பெறுமானத்தை உய்த்தறிக.

4. 1. ஒரே எண் தோன்றுவதற்கான நிகழ்தகவைக் காண்க.
2. சதுரமுகி தாயக்கட்டையில் முக்கோண எண் கிடைப்பதை A என குறிக்க.
3. நான்முகி தாயக்கட்டையில் 3 இன் மடங்கு கிடைப்பதை B என குறிக்க.
4. A, B சாரா நிகழ்ச்சி என காட்டுக.




5. நேர்விளிம்பு, கவராயம் cm, mm அளவிடை ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டி
1. AB = 8cm, கோணம் ABO = 90பாகை, BO = 4cm ஆகுமாறு ஒரு முக்கோணி ABO ஐ அமைக்க.
2. AB ஐ B இல் தொடுவதும் O வை மையமாகவுடையதுமான வட்டத்தை அமைக்க.
3. நீர் வரைந்த வட்டத்திற்கும் பக்கம் AB இற்கும் இடையிலான தொடர்பை எழுதுக.
4. AB=AC ஆகுமாறு C என்னும் புள்ளியை வட்டத்தின் மீது குறித்து CO வை இணைக்க.
5. முக்கோணி AOB= முக்கோணம் AOC என நிறுவுக.
6. பக்கம் AC ஆனது Cயில் வட்டத்தை தொடுகிறது எனக் காட்டுக.

7. உருவில் BC // DE ஆகும். x இன் பெறுமானத்தைக் காண்க.




8. சாவிக் கொத்து ஒன்று பார்த்த மாத்திரத்தில் சமமாகத் தோற்றும் 5 சாவிகளைக் கொண்டுள்ளது. எனினும் ஒரு குறித்த பூட்டை அவற்றில் ஒரு சாவியினால் மாத்திரம் திறக்கலாம். மாணவன் ஒருவன் எழுமாற்றாக ஒவ்வொரு சாவியையும் பயன்படுத்தி அப்பூட்டைத் திறப்பதற்கு அதிகபட்சம் இரு தடவை முயல்வதற்கு தீர்மானிக்கின்றான். முதல் முயற்சி தோல்வியடைந்தால் மாத்திரம் அவன் மறுபடியும் ஒரு தடவை முயலும் அதேவேளை, அதற்காக எஞ்சியிருக்கும் நான்கு சாவிகளில் ஒன்றை எழுமாற்றாகத் தெரிந்தெடுக்கின்றான்.
1. முதல் முயற்சியிலேயே பூட்டு திறக்கப்படுவதற்கான நிகழ்தகவு யாது?
2. ஒவ்வொரு முயற்சியிலும் பூட்டைத் திறத்தல், திறக்காமை என்னும் நிகழ்ச்சிகளையும் அந்நிகழ்ச்சிகளுக்குரிய நிகழ்தகவுகளையும் காட்டும் ஒரு மரவரிப்படத்தை வரைக.
3. இரு முயற்சிகளில் எதில் மாணவன் பூட்டைத்திறத்தல் சாத்தியமாகும் நிகழ்தகவைக் காண்க.

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
G.C.E (O/L) பிரதி சனி தோறும் பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

01. $0.5moldm^{-3}$ செறிவுடைய NaOH இன் 600ml கரைசலின் செறிவை $0.3moldm^{-3}$ ஆக்குவதற்கு சேர்க்கவேண்டிய நீரின் அளவு?
1. 200ml 2. 300ml 3. 400ml 4. 600ml

02. மின்பகுப்பின் மூலம் மின்முலாமிடும் போது யாதாயினும் ஓர் உலோக மேற்பரப்பின் மீது நிலையான சீரான மின்முலாமிடுதலைப் பெறுவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது?
1. மின்பகுபொருளை அசையாமல் வைத்திருத்தல்.
2. மின்பகுபொருளின் வெப்பநிலையைத் தொடர்ச்சியாக மாற்றுதல்.
3. மின்பகுப்பிற்கு மிகச் சிறிய மின்னோட்டத்தைப் பிரயோகித்தல்.
4. மின்முலாமிட வேண்டிய பொருளின் மீது கொழுப்புப் படையைப் பூசுதல்.

03. உலோகம் ஒன்றின் அடர்த்தி 2400Kg. அதன் கனவளவு $0.3m^3$ ஆகும். இவ்வுலோகத்தின் $1000Kgm^{-3}$ அடர்த்தி கொண்ட திரவத்தினுள் முழுமையாக அமிழ்த்தும் போது தோற்ற நிறை யாது?
1. 2040N 2. 2400N 3. 4200N 4. 3300N

04. பழங்களுக்கு விசிறி வெட்டுப்படை உண்டாவது தாமதப்படுத்தப்படுவதன் மூலம் பழம் வருவதை தாமதப்படுத்தும் ஓமோன் எது?
1. IAA 2. NAA 3. 2,4 -D 4. BST

05. குறித் ஒரு குறுக்கலை உருவாகும் போது ஒரு செக்கனுக்கு 2 தாழிகளும் 2 முடிகளும் உண்டாகின்றன. இந்த அலையின் இரு அடுத்துள்ள முடிகளுக்கிடையே இருக்கும் தூரம் 0.2m எனின், அலையின் வேகம் யாது?
1. $0.1ms^{-1}$ 2. $0.4ms^{-1}$ 3. $0.8ms^{-1}$ 4. $10ms^{-1}$

06. இலங்கையை உலுக்கிய டெங்கு நோக்காவியான நுளம்பு மனிதனுக்கு எந்த நேரம் அதிகளவில் பாதிக்கின்றது?
1. காலை 4.30 முதல் 10.30 வரையும், மாலை 4.00 முதல் 7.00 மணி வரையும்
2. காலை 6.30 முதல் 10.00 வரையும், மாலை 3.30 முதல் 6.30 மணி வரையும்
3. காலை 5.30 முதல் 9.30 வரையும், மாலை 4.00 முதல் 8.00 மணி வரையும்
4. காலை 7.30 முதல் 9.30 வரையும், மாலை 5.00 முதல் 8.00 மணி வரையும்

07. 2006 தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் எத் தடிப்பிலும் குறைவான பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டது?
1. 30μ 2. 20μ 3. 35μ 4. 25μ

08. கீழ்வரும் பொருட்களில் நிறப்பூச்சுக்கள் தயாரிக்கும் போது பச்சை நிறத்திற்கு காரணமான இரசாயன பொருள் எது?
1. $TiO_2$ 2. $PbCrO_4$ 3. $Cr_2O_3$ 4. C தூள்

09. நைதரசன் வாயுவின் உபயோகம் அல்லாதது எது?
1. ஐதரசீன் தயாரிப்பில் பயன்படுகிறது.
2. வானூர்திகளின் டயரை நிரப்ப பயன்படுகிறது
3. எண்ணெய் சேமிப்பு தாங்கிகளில் ஒட்சிசனை அகற்றப் பயன்படுகிறது
4. பொலிவைனல் குளோரைட்டு தயாரிப்பில் பயன்படுகிறது.

10. தேசிய சுண்ணாம்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் சுண்ணாம்புக் கல்லில் அடங்கும் பொருள் எது?
1. கல்சியம் ஒட்சைட்டு 2. கல்சியம் காபனேற்று
3. கல்சியம் பொசுபேற்று 4. கல்சியம் சல்பேற்று

11. தைரொயிட் சுரப்பியில் காணப்படும் மேலணி இழையம் எது?
1. கம்பமேலணி 2. கனமேலணி 3. படைகொண்ட மேலணி
4. பிசிர் மேலணி

12. செக்கனுக்கு 5m என்னும் கதியை மணிக்கு கிலோ மீற்றரில் தருவது பின்வருவனவற்றுள் எது?
1. 5x1000x3600 2. 5x 1000/3600 3. 5x 3600/1000
4. 5/1000 x3600

13. துலக்கப்பட்ட சீமெந்துத் தரையில் உள்ள ஓர் அலுமாரியை 500N கிடை விசையினால் மட்டுமட்டாகத் தள்ள முடியும். அலுமாரி கரடுமுரடான ஒரு தரையில் வைக்கப்பட்டு அதனைத் தள்ளுவதற்கு 500N கிடை விசை பிரயோகிக்கப்பட்டால் அதன் மீது தாக்கும் உராய்வு விசையானது
1. 500N க்குக் கூடியது 2. 500N க்குச் சமனானதாகும்
3. 500N க்குக் குறைவானதாகும் 4. தரவுக்கமைய தீர்மானிக்கமுடியாது

## பாடம் : வரலாறு

01. 1. மறுமலர்ச்சிக்கால கலை வளர்ச்சிக்கு உதவிய கலைஞர்கள் மூவரைக் கூறுக.

2. பின்வரும் கண்டுபிடிப்புக்களுடன் தொடர்புபடுவோரைக் கூறுக.
அ. தொலைக்காட்டியைக் கண்டுபிடித்தவர்
ஆ. அச்சியந்திதர்தைக் கண்டுபிடித்தவர்
இ. கருதிச்சுற்றோட்டத்தைக் கண்டறிந்தவர்
ஈ. கோள்களின் நீள்வட்டச் சுழற்சியைக் கண்டறிந்தவர்.

3. ஐரோப்பாவில் சமய சீர்திருத்த இயக்கம் தோற்றம் பெற்றமைக்கு ஏதவான இரு விடயங்களைக் கூறி விளக்குக.
4. சமயச் சீர்திருத்த இயக்கத்தால் ஏற்பட்ட விளைவுகள் இரண்டைக் கூறி விளக்குக.

02. 1. நீர்வள நாகரீக காலத்தில் தொழில்நுட்பம் உயர்வடைந்திருந்த துறைகள் எவையேனும் மூன்று கூறுக.
2. அபயகிரி விகாரை நிறுவப்பட்டமையானது வரலாற்றில் பெறும் முக்கியத்துவங்கள் இரண்டை குறிப்பிடுக.
3. அநுராதபுரம் இராசதானி கைவிடப்பட்டமைக்குரிய காரணங்கள் இரண்டைக் கூறி விளக்குக.
4. இராசரட்டைப் பொறியியலாளர்கள் நீர்ப்பாசனவியல் படைத்த சாதனைகள் இரண்டைக் கூறி விளக்குக.

03. திறைசேரிக்குப் பொறுப்பான அதிகாரி அழைக்கப்பட்டமை.
1. படகாரிக 2. மஹல 3. அமதே 4. அசிக்காசிக

04. கிரி விகாரையை அமைத்தவர்
1. பராக்கிரமபாகு 2. நிஸங்கமல்ல 3. விஜயபாகு 4. பராக்கிரமபாகு

05. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்றால் என்ன?

06. கல்லாயுதங்களும், வானர மனிதனுடைய பற்களும் கண்டுபிடிக்கப்பட்ட இடம்?

07. கற்காலத்துக்குரிய தொல்பொருட்கள் கிடைக்கப் பெற்ற இடங்கள்?

08. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்?

09. மனித எலும்புத்துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் எவை?

10. 12500 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கட்டிட இடிபாடும் சிறிய அடுப்பும் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?

11. 27000 வருடங்களுக்கு முன் உப்பு பயன்பாடு இருந்தது என்பதற்கான சான்று கிடைக்கப்பெற்ற இடம்?

12. வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் மரணச் சடங்கு பற்றிய தகவல் கிடைத்த இடங்கள் எவை?

13. இலங்கைக்கு ஆரியர் வருகை பற்றிக் குறிப்பிடும் மூலாதாரங்கள் எவை?

14. ஆரியரின் தாயகம் எது?

15. ஆரியர் இந்தியாவுக்குள் வந்தவழி எது?

16. ஆரியர் இந்திய வருகை பற்றி குறிப்பிடும் மூலாதாரங்கள் எவை?

17. ஆரியர் அந்தியா வரும் போது நிலவிய நாகரிகம் எது?

ஆசிரியர் : அகிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கையில்லா....

, மாகாணசபைத் தவிசாளருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை யூலை மாத மாகாண சபை அமர்வுகளில் முன்வைக்கப்போவதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து யூலை மாத மாகாண சபை அமர்வுகளில் பெரும் எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியிருந்த இவ்விடயம் தொடர்பாக எவ்வித பிரேரணைகளும் முன்வைக்கப்படவில்லை.

தவிசாளருக்கு எதிராகக் கண்டனத் தீர்மானத்தையேனும் இவ்வமர்வுகளில் எக்கட்சியும் முன்வைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை தாக்குதலுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபையின் மாதாந்த சபை அமர்வு தவிசாளர் ஆரியபதி கலப்பதி தலைமையில் ஆரம்பமானபோது கிழக்கு' மாகாண சபை மு.கா. குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீல் கண்டனப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

அவ்வுரையில், அளுத்கம, பேருவளை முஸ்லிம்கள் மீது பொதுபல சேனா அமைப்பு திட்டமிட்டே தாக்குதல்களை மேற்கொண்டது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இதனால் முஸ்லிம்களின் உயிர், உடமைகள் அழிக்கப்பட்டதுடன் அவர்களது பொருளாதாரம் முற்றாக அழித்தொழிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளை கிழக்கு மாகாண சபை வன்மையாக கண்டிப்பதுடன் அது தொடர்பில் நீதியான விசாரணைகளை மேற்கொள்வதற்கும் அதன் சூத்திரதாரிகளை தண்டிப்பதற்கும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் எதிர்காலங்களில் இவ்வாறான இனவெறித் தாக்குதல்கள் இடம்பெறா வண்ணம் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டக் கோரியும் அரசாங்கத்தை வலியுறுத்தி எமது மாகாண சபை தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும் என ஜெமீல் கோரிக்கை விடுத்தார்.

# இனொசன்ஸ் அக்கடமி பாலர் பாடசாலை சிறார்களின் கண்காட்சி

(லியோன்)

மட்டக்களப்பு தன்னாமுனை மியானி நகர் ஹோலி இனொசன்ஸ் அக்கடமி பாலர் பாடசாலை சிறார்களின் சித்திரம் மற்றும் கைப்பணி பொருட்களின் கண்காட்சி சொமஸ்கன் அருட்சகோதரிகளின் அனுசரணையுடன் பாடசாலை அதிபர் அருட்சகோதரி .இ .சுலக்ஸ்னா தலைமையில் நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகளினால் திறந்து வைக்கப்பட்டது .

இன் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு முன்பள்ளி பருவ பராமரிப்பும் ,அபிவிருத்தியும் உதவி கல்வி பணிப்பாளருமான .எம் .புவிராஜ் , சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்ட செயலக முன்பள்ளி பருவ பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் வி . முரளிதரன் , ஏறாவூர் பற்று பிரதேச முன்பள்ளி பருவ பராமரிப்பு, அபிவிருத்தி உத்தியோகத்தர் மொகமட் சர்ஜுன் , மியானி அருட்சகோதரிகளின் தலைமை அருட்சகோதரி மரிய கிராஸியா மற்றும் அருட்சகோதரிகள், அருட்தந்தை ஆகியோர் கலந்துகொண்டனர்.

வருகை தந்த அதிதிகளை பாடசாலை சிறார்களினால் மலர் மாலை அணிவித்து அழைத்து வரப்பட்டன. நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கேற்ற பற்று இறை வணக்கத்துடன் ஆரம்பமானது . இதனை தொடர்ந்து சிறுவர்களின் கண்காட்சி கூடத்தை அதிதிகளினால் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது . இக் கண்காட்சியை பார்வையிடுவதற்காக இப் பாடசாலை சிறார்கள் ,இவர்களின் பெற்றோர்கள் ,தன்னாமுனை புனித வளனார் வித்தியாலய சிறுவர்கள் ,மயிலம்பாவெளி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய சிறார்கள் ,இப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் ,மியானி முன்பள்ளி தொழில் பயிற்சி பெரும் மாணவர்கள் , ஆசிரியர் மற்றும் இப் பகுதி முன்பள்ளி பாடசாலைகளின் சிறார்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர் .இக் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்கள் யாவும் இப் பாடசாலை ஆசிரியர்கள் , பாடசாலை சிறார்கள் மற்றும் இவர்களின் பெற்றோர்களின் பங்களிப்புடன் மிக சிறப்பாக தயாரிக்கப்பட்டு கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது .







## ஆலடி விநாயகர்.....

எண்ணைக் காப்பு சாத்துவதற்கு அடியவர்கள் எண்ணையைக் கொண்டு வருவதற்கு ஆலயம் தடை விதித்திருந்தது. கலப்படமான எண்ணையாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் இதற்குத் தடை விதித்திருந்த ஆலய உரிமையாளர்கள் அதற்குப் பதிலாகச் சுத்தமான எண்ணையைச் சாத்துவதற்கு அடியவர் ஒருவருக்கு ரூபா இருநூறைக் கட்டணமாக அறிவித்ததை அடுத்தே இந்நிலை அடியவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

நிலாவெளியில் இருந்து வருகை தந்திருந்த ஆறு பேரைக் கொண்ட குடும்பமொன்று எண்ணைக் காப்பு சாத்துவதற்கு ஆயிரத்து இருநூறு ரூபாவைச் செலுத்த முடியாது போகவே ஐந்து பேருக்குப் பதிலாக ஒருவர் மட்டுமே எண்ணைக்காப்பு சாத்திவிட்டுத் திரும்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை ஆலடி வினாயகரின் கும்பாபிசேகம் கடந்த............... திகதி மிகச்சிறப்பாக நடந்தேறியுள்ளது. இக்கும்பாபிசேகத்திற்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான திரு.சம்பந்தன் அவர்கள் வருகைதந்திருந்தார்.

## இந்திய வான்படைத்.....

வருகை தந்திருந்த அவர் திருக்கோணேஸ்வரத்திற்கு வந்து சிவதரிசனம் செய்திருந்தார். அங்கு அவருக்கு திருக்கோணேஸ்வரப் பரிபாலனசபையின் திரு.பரமேஸ்வரன் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

## சுதந்திரக் கட்சிக்குப்.....

கிழமை இடம்பெற்ற ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அன்பர்ந்த மக்களே நீங்கள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த இடமாற்றத்திற்கு பின்புலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அருண் தம்பிமுத்து இருப்பதாக கூறப்படுகிறது.ய

தாங்களும் அரசாங்கத்துடன் இருக்கிறோம் எங்களையெல்லாம் தூர்த்திக்கொண்டு அவர்கள் அரசியலுக்கு வருவதற்கான முன்முயற்சியாக இவற்றை செய்கிறார்கள் போல் தெரிகிறது. இங்கு வரும் அருண் தம்பிமுத்து என்றாலும் சரி பிரதி தலைவர் என்றாலும் சரி இவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி வந்தார்கள்.அவர்கள் தங்களது கட்சியை கட்டியெழுப்புவதற்காகவே இங்கு வருகிறார்கள். இவர்களுக்கு மக்கள் இடமளிக்க கூடாது. இவர்களுக்கு சிலர் வால் பிடிக்கின்றனர். கை சின்னத்துக்கு மாறுங்கள் என்று சொல்பவர்களுக்கு பின்னால் மக்கள் செல்லக் கூடாது என்றார்.

## முஸ்லிம் இளைஞர்கள்...

தனது இப்பதிவில் அவர் முஸ்லிம்களுக்கு எதிரான எழுச்சியினால் நான்கு விளைவுகள் ஏற்படும் சாத்தியம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். அவை முறையே ஆயதப்படைகளிலும் அரச நிர்வாகத்திலும் உள்ள முஸ்லிம்களின் மனச் சவையணியைப் (ளநவெைஅநவெள) பாதிக்கும் எனவும் கிழக்கிலுள்ள முஸ்லிம்களை சிங்கள மக்களிடமிருந்து பிரித்து தமிழத் தேசிய வாதிகளின் கைகளில் விழுத்தும் என்றும், அரசிற்கு எதிராக ஆயதம் தாங்கிய முஸ்லிம் இளைஞர்களின் படையணியொன்றை உருவாக்கலாம் என்றும், புலம்பெயர் சமூகத்தில் மூன்றாவது எதிரணியொன்றை இலங்கைக்கு எதிராக உருவாக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கடத்தப்பட்ட குழந்தை...

முகமட் பலீல், முகாரி பாத்திமா ஆகியோரின் 14 மாத ஆண்குழந்தையே கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த 16ம் திகதி இரவு 8.30 மணியளவில் இக்குழந்தையை கடத்தியவர்கள் உரிய வீட்டு வாசலில் விட்டுச் சென்றுள்ளதாக அக்குழந்தையின் பெற்றோர் தெரிவித்தனர்.

குழந்தையை வாசலில் கண்டு பிடித்து மீட்ட போது அக்குழந்தை பெண்பிள்ளையின் சட்டையும் வளையல்களும் அணிந்திருந்ததாக பெற்றோர் மேலும் தெரிவித்தனர். குழந்தை கிடைத்தவுடன் செய்தி காவல்துறைக்குத் தெரியவரவே சம்பவ இடத்திற்கு விரைந்த காவல்துறையினர் குழந்தையைப் புகைப்படம் எடுத்ததுடன் சற்றே உடல் நலம் சீரற்றிருந்த குழந்தையை திருகோணமலைப் பொதுவைத்தியசாலையில் அனுமதித்தும் உள்ளனர்.

இக்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான ஒருவர் விளக்கமறியலில் உள்ள போது குழந்தையை வேறசிலர் முச்சக்கர வண்டியில் வந்து வீட்டு வாசலில் விட்டுச் சென்றுள்ளதால் இக்கடத்தலுடன் சம்பந்தப்பட்ட மேலும் சிலர் அச்சமின்றி வெளியில் நடமாடுவது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. காவல்துறை விசாரணைகள் தொடர்கின்றன.

## அமைச்சரின் ஏற்பாட்டில் இப்தார்




(பஹ்மியூஸுப்)

கடந்த 05 வருடங்களாக திருகோணமலை மாவட்டத்தில் சமூக நல்லினக்கத்தைக் கருத்தில் கொண்டு கிழக்கு மாகாண சபை வீதி அபிவிருத்தி, நீரப்பாசனம், வீடமைப்பும் நிர்மாணமும், கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை யின் ஏற்பாட்டில் இம்முறையும் புனித ரமழான் மாதத்தின் இப்தார் எதிர் வரும் 18.07.2014 வெள்ளிக் கிழமை திருகோணமலை இந்துக் கலாச்சார மண்டபத்தில் 2000 பேர் கலந்துகொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டடுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஸகாத் : ஒரு சமூகக் கடமை

நோன்பும் ஸகாத்தும் தனித்தனியாக பிரிந்தமைந்த இரு பெரும் கடமைகள். எனினும் நம் சமூகத்தில் ரமழான் மாதத்திலேயே ஸகாத் கடமையையும் நிறைவேற்றுகின்ற பாரம்பரியம் இருந்து வருகின்றது. இந்நடைமுறை கட்டாயம் பின்பற்றப்படவேண்டும் என்றில்லாவிடின் இத்தகைய ஒருங்கிணைப்பு மூலம் செல்வந்தர்கள் தமது சொத்துக்களை வருடாந்தம் கணக்கிட்டு அதன் கடமையை நிறைவேற்றவும் ஸகாத் சேகரிப்பை இலகுபடுத்தவும் முடியாமல் போய்விடுவது நோக்கத்தக்கதாகும்.

"நபியே அவர்களின் செல்வங்களிலிருந்து ஸகாத்தை எடுத்து அதனால் அவர்களை உள்ளும் புறமும் தூய்மைப் படுத்துவீராக" (09:103). மேற்குறிப்பிடப்பட்ட அல்-குர்ஆன் வசனம் ஸகாத் கடமையாக்கப்பட்டதன் நோக்கத்தை தெளிவுபடுத்துகின்றது. ஒவ்வொரு கடமைக்கும் நோக்கம் இருப்பது போல ஸகாத்தின் நோக்கமாக இங்கு இனங்கானப்பட்டிருப்பது 'தஸ்கியா' எனப்படும் தூய்மைப்படுத்தல் ஆகும். அதாவது ஸகாத் கொடுக்கும் செல்வந்தர் அதனைப் பெறுபவர் என இரு தரப்பிலும் சடரீதியாகவும் உளரீதியாகவும் ஏற்படுத்தும் தூய்மைப்படுத்தலே இதுவாகும்.

இறையருளில் ஒன்றான பொருட் செல்வத்தை பெற்ற மனிதன் அதனை தனக்களித்த அல்லாஹ்வின் கட்டளைக்கு சிரம்தாழ்த்தி அதிலுள்ள ஏழையின் பங்கை வழங்கிட முன் வருகையில் அது அவனில் பல தாக்கங்களை ஏற்படுத்திவிடுகின்றது.

தொடரும் .. ..

## வாரமொரு ஜோக்

- அருணன் -




புதுவருட நாளில் நகைக்கடைக்கும், புடவைக் கடைக்கும் போய் வருவதாகக் கூறி காலை புறப்பட்டவர், மாலை வீடு திரும்பும் போது ஒரு பொதியுடன் வந்து சேர்ந்தார். புதுப்புடவையும், நகையுமென எதிர்பார்த்த மகள் ஏமாற்றமடைந்தாள். தந்தை கொண்டு வந்தவை அத்தனையும் புதுவருடக் கலண்டர்கள்!? ஒரு வீட்டிற்கு ஒரு கலண்டர் போதாதா இத்தனை எதுக்கு என்று சினந்து கேட்ட மகளுக்கு தந்தை: சும்மாதானே தாராங்க. அதான் வாங்கி வந்தன். சும்மா என்றாள் எதைக் கொடுத்தாலும் வாங்குவார் போலும். ஹா ஹா ஹா

* * * *

பட்டியில் நின்ற ஆடகள் நோயுற்றன. இவற்றைக் காப்பாற்ற வைரவருக்கு நேர்த்தி செய்வோமென மனைவியையும் அழைத்துக் கொண்டு ஒரு கணவன் சென்றார் கோயிலுக்கு. 'வைரவா! எனது ஆடகளைக் காப்பாற்று பட்டிக் கிடாயை உனக்கு பலி தருவேன்' என்றார். திடுக்கிட்ட மனைவி 'பட்டிக் கிடாயை பலியிட்டால் பட்டிக்கு இல்லாமல் போய்விடுமே!' என்று திட்டினாள். அதற்கு கணவன் 'எடியே நான் சும்மா சொன்னேன்' என்றார். ஹா ஹா ஹா

சும்மா என்ற சொல் மட்டும் அகராதியில் இல்லாட்டி ... ...



## கொள்ளு கஞ்சி

**தேவையான பொருட்கள்**



வறுத்துப் பொடித்த கொள்ளு, வறுத்துப் பொடித்த பார்லி மாவு (இவை இரண்டையும் மொத்தமாக தயார் செய்து வைத்துக் கொள்ளலாம்). சீரகத்தூள் - 1 சிட்டிகை, மிளகுத்தூள் - ஒரு சிட்டிகை, உப்பு - ஒரு சிட்டிகை.

**செய்முறை**

கொள்ளுமாவின் அளவில் 1/2 பங்கு பார்லி மாவு, மிளகுத்தூள், சீரகத்தூள், உப்பு சேர்த்துக் கலக்கி கஞ்சி காய்ச்சவும்.

- தினமும் பருகுவதால் உடல் உறுதி பெறும். கெட்டநீர் முழுவதும் வெளியேறும். ஊளைச்சதை கரையும். உடல் சிக்கென்று கட்டுக்கோப்பாக இருக்கும்.

## ஃபுரூட் இட்லி

**தேவையான பொருட்கள்**

பச்சரிசி - 1/2 கப், புழுங்கல் அரிசி - 1/2 கப், உளுந்து - 1/4 கப், வெந்தயம் - 1/2 டீஸ்பூன், முந்திரி – 10, பாதாம் - 10, இஞ்சி - சிறுதுண்டு, பச்சை மிளகாய் - 3, கல் உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - தேவையான அளவு, பேரீச்சம்பழம் - இட்லிக்கு ஒன்று வீதம்

**செய்முறை**



அரிசி, உளுந்தை சுத்தம் செய்து சேர்த்து 1 மணி நேரம் ஊற வைத்து, வெந்தயம் சேர்த்துக் கரகரப்பாக கிரைண்டரில் அரைக்கவும். அதனுடன் உப்பு சேர்த்து 4 மணி நேரம் புளிக்க விடவும். பிறகு, ஒரு தாச்சியில் எண்ணெய் ஊற்றி உளுந்து, கடலைப்பருப்பு, நறுக்கிய இஞ்சி, பச்சை மிளகாய், உடைத்த முந்திரி, பாதாம் சேர்த்து, தாளித்து மாவில் கலக்கவும். மாவை இட்லி பாத்திரத்தில் ஊற்றி மிதமான சூட்டில் வேக வைக்கவும். பாதி வெந்ததும், இட்லி மீது ஒவ்வொரு பேரீச்சம்பழத்தைப் பதிக்கவும். இட்லி வெந்ததும் இறக்கவும். தேங்காய் சட்னி, சாம்பார் தொட்டுக்கொள்ளலாம்.

## பெண்கள் எப்படிப்பட்டவர்கள்!!



காதலிக்கும் போது சில பெண்கள் தங்களது காதலர்களை எரிச்சலடைய செய்வதில் நம்பர் ஒன்னாக இருப்பார்கள். சில ஆண்கள் பொறுத்துப்போவார்கள், ஆனால் ஏராளமான ஆண்கள் நீயும் வேண்டாம், உன் காதலும் வேண்டாம் என்று ஓடிவிடுவார்கள்.

அப்படி பெண்கள், ஆண்களை எரிச்சலடைய செய்யும் சில செயல்களை பற்றி பார்க்கலாம்.

- ஆயிரக்கணக்கான கேள்விகள் கேட்டு குடைந்தால் ஆண்கள் எரிச்சலடைவார்கள். ஆண்களின் கவனத்தை ஈர்க்க ஒரு உறவில் பெண்கள் இப்படி செய்வது வாடிக்கையான ஒன்றே.
- சில பெண்கள் தங்கள் காதலரிடம் சொன்ன விடயத்தையே திரும்ப திரும்ப சொல்லிக்கொண்டிருப்பார்கள். இதைக் கேட்கும் காதலனுக்கு பைத்தியமே பிடித்து விடும்.
- ஆண்களை எரிச்சலடைய வைக்க பெண்கள் செய்யும் காரியங்களில் ஒன்று தான் பல ஆண்களுடன் ஊர் சுற்றி அவர்களுடன் கடலை போடுவது. அது அவருக்கு சரியாக பட்டாலும், ஆண்கள் அதனை வெறுப்பார்கள்.
- ஒன்றுமே இல்லாத விடயத்திற்கு எல்லாம் கவலைப்படுவது பெண்களின் சிறப்பம்சமாகும். இது ஆண்களை எரிச்சலடைய செய்வது மட்டுமல்லாமல் கோபத்தையும் உண்டாக்கும்.
- பெண்கள் என்றால் மிகவும் உணர்சிவசப்பட்டவர்கள். அதுவும் பெண்கள் அழும் போது அவர்களுடன் இருந்தால் வெறுப்பே வந்துவிடும். பார்ப்பவர்களையும், கேட்பவர்களையும் தலைகீழாக புரட்டி போட்டு விடுவார்.
- பெண்கள் தங்கள் பொழுதை போக்க தேர்ந்தெடுக்கும் ஒரு பொதுவான வழி, பிறரை பற்றி புரணி பேசுவது. ஆண்களும் அதில் ஈடுபடுவார்கள், ஆனால் பெண்கள் அளவிற்கு இல்லை.
- பெண்கள் அவ்வளவு சுலபத்தில் எதற்கும் சமாதானம் அடைய மாட்டார்கள். இது கோபத்தை கண்டிப்பாக தூண்டும். ஒரு 'ஈப்பிங் அழைத்து செல்வதாக கூறிவிட்டு ஏமாற்றிவிட்டால், ஒரு பெரிய பிரச்சனையை ஆரம்பிப்பதோடு மட்டுமல்லாமல் எளிதில் சமாதானம் அடையமாட்டார்கள்.

காலம் எத்தனை சென்றாலும் பெண்களின் சிலவற்றை மாற்றுவதென்பது நாய் வாளை நிமிர்த்துவது என்பது போலாகும். அவர்களை அவர்களாகவே ஏற்றுக்கொள்ளப் பழகினால் குடும்பத்தில் பிரச்சினைகள் குறையும்

முற்றும் .. ..

# கொட்டியாபுரத்து சிங்கம்

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

கடந்த வார தொடர்ச்சி .. ..

மக்கள் கூட்டம் கூட்டமாக கையில் அகப்பட்ட கோயில் திருவுருவச் சிலைகளை எடுத்துக் கொண்டு ஓடினர்.

**சம்பூர் சதீஸின்**

அப்போது நானும் எடுத்த ஒரு சிலையைக் கொண்டு வந்துள்ளேன் என்ற கூறி கையிலிருந்த சிறிய பிள்ளையார் சிலையொன்றைக் காட்டினார். அது மிகவும் அழகாயிருந்தது. புராதன காலத்து தமிழர்களின் கலைத்திறமையை அது எடுத்துக்காட்டியது.




சிலையை இரசித்துப் பார்த்த மன்னன் தனது தூரத்து உறவினரான பூபால வன்னிமையைப் பற்றி விசாரித்தான். அதற்கு அப்பெரியவர் பறங்கிப் படைகளுடன் இறுதிவரை சளைக்காது வீரப்போர் புரிந்த பூபால வன்னியனார் வீரசுவர்க்கம் எய்தியதாகவும், பறங்கிப் படைகள் பூபாலக்கட்டு மாளிகையைச் சூறையாடி தீக்கிரையாக்கியதாகவும், இளவரசர் தம்பலகாமப் பற்றுக்கு தப்பிச் சென்றதாகவும் பேசப்படுகிறது என்று கூறி விட்டு, நாங்கள் பறங்கியருக்குப் பயந்து கொட்டியாபுரப்பற்றில் வாழும் நோக்கத்தில் எங்கள் உயிரையும் பொருட்படுத்தாது கடல் வழியாக வந்தோம் என்றார். இறுதியாக அவர் கூறிய கோணேசப் பெருமான் இல்லாத அப்பூமிக்கு இனி நாங்கள் போகமாட்டோம் என்று கூறி உடல் தளர்ந்த நிலையில் தரையில் சாய்ந்தார். பிள்ளையார் சிலையும் நிலத்திலே வீழ்ந்தது.

அப்பெரியவருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிய இளவரசன் தன்னைப் பற்றிக் கூறியதோடு, இங்கு எவ்வித கவலையுமில்லாது நீங்கள் வாழலாம் என்று உறுதிமொழி கொடுத்தார். அதுமட்டுமல்லாது கோணேசர் கோயிலிலிருந்து எடுத்து வந்த இப்பிள்ளையார் சிலையை இக்கோயிலில் வைத்து வழிபாடு செய்யுங்கள் என்று கூறி அருகிலிருந்த பிள்ளையார் கோயிலை சுட்டிக் காட்டினார். அக்கோயிலை அன்றுமுதல் கோணேசப் பிள்ளையார் கோயில் என்று அழைத்து பூசை வழிபாடுகளும் நடத்தினர்.

இம்மக்களை அழைத்துக் கொண்டு சம்பூரின் ஒரு பகுதியில் குடியிருக்க வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்து ஆதரித்தான் இளவரசன் இளஞ்சிங்கன்.

### இஸ்லாமியர்களின் கொட்டியார வருகை

கிழக்குப் பிரதேசம் தவிர்ந்த நாட்டின் ஏனைய கரையோரப் பிரதேசங்களை ஆக்கிரமித்து ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற போர்த்துக்கீசரால் அடித்துத் துரத்தப்பட்ட இஸ்லாமிய மார்க்கத்தை தழுவிய மக்கள் கூட்டத்தை ஆதரித்த கண்டியரசன் அவர்களுள் குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையிலான மக்களை மட்டக்களப்பு, கொட்டியாபுரப் பற்று பிரதேசங்களில் குடியமர்த்துமாறு கோரி அனுப்பப்பட்ட தகவலைப் படித்துக் கொண்டிருந்த வன்னியனார் எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் ஏற்படப்போகும் நிகழ்வுகளை எண்ணி கவலை கொண்டவாறு படைத்தலைவனை அழைத்து வருகின்ற மக்கள் கூட்டத்தை குடியமர்த்துவதற்கான இடங்கள் பற்றி ஆராய்ந்தார்.



ஏற்கனவே பறங்கியர் மேல் வெறுப்புக் கொண்ட கொட்டியாரப்பற்று மக்கள் அவர்களால் விரட்டப்பட்ட மக்கள் கூட்டம் தவளங்களிலும், கால்நடையாகவும் வந்துகொண்டிருந்த போது வன்னிபனார் தலைமையில் அவர்களை வரவேற்று உபசரித்தனர். வன்னியனாரும் அவர்களுக்கு ஆறுதல் கூறி தனது ஆட்சிக்குட்பட்ட கொட்டியாரப்பற்றில் பூரண சுதந்திரமாக நடமாடவும் வன்னிமைக்கு பூரணமாக கட்டுப்பட்டு வர்த்தக நடவடிக்கைகளை நடாத்துவதற்கும் அங்கிகாரம் அளித்தார்.

இவர்கள் பெருமளவில் கொட்டியாரத் துறையை அண்டிய முத்தூரிலும் பெரிய தோப்பிலும் குடியேறினர். வணிக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

### தாமரை



இளஞ்சிங்கன் இளவரசராகப் பட்டமேற்ற பின் பெரும்பாலான காலத்தை சம்பூரிலேயே கழித்தான். இடையிடையே மாமனார் அரசு செய்யும் மேன்கமத்திற்கு சென்று தாய் தந்தையரையும் வன்னியரான மாமனாரையும் சந்தித்து வரும் காலத்தில், வன்னிமையிடமிருந்து வந்த கண்டி செல்வதற்கான அவரச அழைப்பை ஏற்று அடுத்தநாள் காலை மேன்கமம் செல்ல எண்ணங் கொண்டவனாய், தன்னுள்ளங் கொள்ளை கொண்ட தாமரையைப் பார்ப்பதற்காக அவர்கள் வழக்கமாகச் சந்திக்கும் இடத்தை நோக்கி புரவியைச் செலுத்தினான்.

அங்கே தாமரை வில்லுக்கரையோரத்திலுள்ள மதுர மரத்தடியில் தண்ணீரில் கல்லெறிந்தவாறு தனித்தே காணப்பட்டாள்.

... பாகம் 08 தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

திருமலை மாவட்டத்தின் கிரிக்கட் திருவிழா என்றால் அது திருகோணமலை மாவட்ட கிரிக்கட் சங்கம் (TDCA) நடாத்தும் Div III கிரிக்கட் சுற்றுப்போட்டி தான். கிரிக்கட் தெரியாதவனுக்கும் விருப்பம் வரத்தூண்டும். நீண்ட இடைவெளியின் பின் திருமலையின் முன்னணி கழகமான நோர்மண்ட்ஸ் (Normonds) விளையாட்டுக் கழகம் மாவட்ட சம்பியன்ஸ் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. கிரிக்கட் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பையும் உற்சாகத்தையும் தந்துள்ளது.

பதிவு செய்யப்பட்ட 13 கழகங்களுடன் (A.Div) பதிவு செய்யப்படாத ஒரு கழகமும் (B.Div) (பதிவு செய்யப்படாத கழகங்கள் தமக்கிடையே போட்டியிட்டு வென்ற கழகம்) பங்கு பற்றிய நொக்கவுட் சுற்றாக நடைபெற்ற இச்சுற்றுப் போட்டித் தொடரில் நோர்மண்ஸ் கழகம் திருகோணமலையின் முன்னாள் மாவட்ட சம்பியன்களான (2010, 2011) சோடியா (காலிறுதி) யங் ஒலிம்பியன்ஸ் (2013, அரையிறுதி) கழகங்களை இலகுவாக வெற்றியீட்டி மற்றைய முன்னாள் சம்பியனான (2012) ஸீபென்ஸ் கழகத்தை இறுதிப் போட்டியில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை நான்கு வருடங்களின் பின் தனதாக்கியுள்ளது.

இறுதிப் போட்டி 12-07-2014 அன்று ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## மீண்டும் ஜனித்த ஜாம்பவான்கள்


நோர்மண்ஸ் ரசிகன்... சயன்

**நோர்மண்ஸ் அணி :** 238/10 (50 ஓவர்கள்)
துடுப்பாட்டம் : சக்தி பிரணவன் - 84, சத்தியா - 40, சாந்தன் - 26
பந்து வீச்சு : பிரதீபன் 4/61, கலீல் - 3/40

**ஸீபென்ஸ் அணி :** 166/10 (45.3 ஓவர்கள்)
துடுப்பாட்டம் : ரிச்சேட் - 32, சம்பந்தன் - 29, பிரதீபன் - 23
பந்துவீச்சு : சக்தி பிரணவன் 4/24, பகீரதன் 4/26

போட்டியின் நாயகனாக சகலதுறைகளிலும் பிரகாசித்த நோர்மண்ஸ் அணியின் சக்தி பிரணவனும், தொடரின் நாயகனாக டைணமிக்ஸ் அணியின் தர்சனும், சுற்றுப் போட்டியின் சிறந்த நன்னடத்தை வீரராக நோர்மண்ஸ் அணியின் தலைவர் சத்தியாவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வெற்றி பெற்ற நோர்மண்ஸ் அணிக்கு ரூபா 15,000மும் வெற்றிக்கிண்ணமும் பிரதம விருந்தினராக வருகை தந்த நகர பிதா க.செல்வராசா அவர்களும், ஸீபென்ஸ் அணியினருக்கு ரூபா 10,000 மும் வெற்றிக்கிண்ணமும் சிறப்பு விருந்தினராக வருகை தந்த ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் பத்மசீலன் அவர்களும் வழங்கி கௌரவித்தனர்.




நோர்மண்ஸ் அணி திருமலையின் முன்னணி கழகங்களான வேல்ஸ் (W), யங் ஒலிம்பியன்ஸ் (Y), நோர்மண்ஸ் (N) பங்குபெறும் முற்தரப்பு வெற்றிக் கிண்ணமான வைன் (WYN) கிண்ணத்தை தொடர்ச்சியாக நான்கு முறை கைப்பற்றி சாதனை படைத்த அணி என்பது இங்கு நினைவு கூறத்தக்கது.

## மல்யுத்தப் போட்டி நாளை

கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான மல்யுத்த போட்டி நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (20.07.2014) அன்று கிழக்குப் பல்கலைக்கழக உள்ளக



விளையாட்டு அரங்கில் நடைபெவுள்ளதாக சிரேஸ்ட விரிவுரையாளரும் விளையாட்டுக் குழு ஆலோசனைசபை தலைவருமான எம்.ரவி தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் இலங்கையிலுள்ள அனைத்து 14 பல்கலைக் கழகங்களும் பங்கு பற்றவுள்ளதாகவும் தெரிவித்தார். இப்போட்டியில் பங்குபற்றவுள்ள வீரர்களின் உடற் தகுதி காண் நிகழ்வு இன்று (19.07.2014) நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். வரலாற்றில் முதல் தடவையாக இந்நிகழ்ச்சி கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மரதன் போட்டி

இவ்வாண்டு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையிலான 13.07 அன்று நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.



இப்போட்டி தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று மணிக்கூட்டுக் கோபுர சுற்று வட்டாரத்திலிருந்து ஆரம்பமான போட்டி பிரதான வீதி வழியாக அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் பிரதேசங்களை ஊடறுத்து தென்கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் நிறைவுபெற்றது. 11 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 77 மாணவ போட்டியாளர்கள் இதன் போது கலந்து கொண்டனர்.

விஞ்ஞாபனம்

வரலாற்று சிறப்புமிக்க

தகவல் : நிர்வாகத்தினர்

## திருக்கரைசயம்பதி கங்குவேலி ஆதிசிவன் தேவஸ்தான




திருக்கரைசயம்பதி கங்குவேலி ஆதிசிவன் தேவஸ்தான வருடாந்த ஆடி அமாவாசை தீர்த்தோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 27.07.2014 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 26.07.2014 இனிதே நிறைவடையவுள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், ஈழத்திலே தோன்றிய இரண்டு தல புராணங்களில் ஒன்றாகிய திருக்கரைசைப்புராணத்தை தனக்கே உரித்தான தலபுராணமாக் கொண்டதுமான புகழ்மிக்க கங்குவேலி ஆதிசிவன் தேவஸ்தான ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் 26.07.2014 அன்று நடைபெற திருவருள் கூடியுள்ளது.

25.07.2014 அன்று பி.ப 2.00 மணியளவில் பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் ஆரோக்கராக்கோசம் எதிரொலிக்க காவடி, மேளதாளத்துடன் தீர்த்தக்கரையைச் சென்றடையவுள்ளார். அன்றிரவு திருக்கரைசப்புராணம் படித்து, இந்துக்கலாச்சார நிகழ்வுகள் இடம்பெற்று மறுநாள் காலை தீ மிதிப்பு வைபவத்தைத் தொடர்ந்து, தீர்த்தோற்சவ வைபவத்துடன் விசேட அபிசேக ஆராதணைகள் இடம்பெற்று தீர்த்தோற்சவ நிகழ்வு இனிதே நிறைவுபெறும்.

குறிப்பு :

திருகோணமலை, மூதூர், ஈச்சிலம்பற்று ஆகிய பகுதிகளில் விசேட பேருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் அன்னதானம் வழங்க விரும்புவோரும், நிதியுதவி செய்ய விரும்புவோரும் நிர்வாகத்தைத் தொடர்பு கொண்டு ஆதிசிவன் அருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

# சர்வதேசச் செய்திகள்

## ஒரே குடும்பத்தில் 7 பேர் தற்கொலை

சீனாவில் உள்ள ஒரு குடும்பத்தினரின் வீட்டை உள்ளூர் பிரமுகர் ஒருவர் கைப்பற்றிவிட்டதாகவும், அதற்கு எவ்வித ந'ட ஈடு தொகையும் கொடுக்காததால் ஒரே நாளில் நடுத்தெருவில்



வந்த அதிர்ச்சியில் அந்த குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வி'ம் குடித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## குழந்தைக்காக தாய்லாந்து நோக்கி

தாய்லாந்தில் தமக்கு பிறக்கப் போகும் குழந்தை ஆணா பெண்ணா என தேர்வு செய்யும் சிகிச்சை முறை பிரபலமாக நடந்து வருகிறது. இங்குள்ள செயற்கை கருவூட்டல் மையங்களில் சீனா மற்றும் ஹாங்காங்கை சேர்ந்த ஏராளமான தம்பதியினர் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

## ரஷ்யா மீது பொருளாதார தடை

உக்ரைன் நாட்டில் பதற்றம் நீடிக்கும் வகையில் கோபமூட்டும் நடவடிக்கையில் ரஷ்யா அடிக்கடி ஈடுபட்டு வருவதால் ரஷியா மீது



புதிய பொருளாதாரத் தடையை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் சேர்ந்து வியாழன் (17.07) விதித்துள்ளன. இதற்கு ரஷ்ய அதிபர் புதின் அமெரிக்காவிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த பொருளாதார தடை ரஷ்யாவின் நிதி நிறுவனங்கள், எரிசக்தித் துறை மற்றும் ஆயுதம் சார்ந்த உபகரணங்கள் துறை ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ளதால் ரஷ்யாவை பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கும் என தெரிகிறது.

## பரவும் தீ, அவதியில் மக்கள்

கனடாவில் உள்ள மேற்கு கெலோவ்னா பகுதியில் காட்டுத் தீ பரவி வருவதால் அப்பகுதியில் இருந்து மக்களை வெளியேறுமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒக்கநாகன் லேக் கரைப்பகுதியில் உள்ள மலையின் மேற்கு சரிவில் தீ பரவியதை தொடர்ந்து மக் அலிஸ்டர் மற்றும் வோவர் மெயின்லாண்டில் முறே லேக் ஆகிய பகுதிகளிலும் காட்டுத் தீ



ஏற்பட்டதால் அங்குள்ள மக்கள் வெளியேறுமாறு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. இந்நிலையில் கொலம்பியாவின் வடகிழக்கு பகுதியில் காட்டுத் தீ 10,000 ஹெக்டர் வரையிலும் வன்கூவர் வடகிழக்குப் பகுதியில் 238-கிலோ மீற்றர்கள் வரை தீ பரவியுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

## விஷக் கடிதம் அனுப்பியவர்க்கு தண்டனை.

கடந்த டிசம்பர் மாதம் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கும் முன்னாள் நியூயார்க் மேயர் Michael Bloomberg



அவர்களுக்கும் விஷம் தடவிய கடிதம் அனுப்பிய நடிகை Shannon Guess Richardson அவர்களுக்கு 18 ஆண்டுகள் ஜெயில் தண்டனை விதித்து நியூயார்க் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பை வழங்கியுள்ளது. ஜெயில் தண்டனையோடு 3.67 லட்சம் டாலர் அபராதத்தையும் நீதிபதி விதித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரவு விடுதியின் பகல் பொழுது

அயர்லாந்து நாட்டில் Belfast என்ற நகரில் உள்ள El Divino's nightclub என்ற இரவு விடுதியில் கடந்த வியாழக்கிழமை இரண்டு ஜோடிகள் கார் பார்க்கிங் பகுதியில் பட்டப்பகலில் பலர் முன்னிலையில் பாலியல் உறவு புரிந்து கொண்டிருந்த புகைப்படம் இணையத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. விலங்குகள் போல வெட்டவெளியில் இதுபோன்ற உறவு கொள்ளும் ஜோடிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இணையம் மூலம் அயர்லாந்து மக்கள் ஆவேசமாக கருத்து தெரிவித்துள்ளனர்.

## உலகின் எல்லையில் குழி



வடக்கு சைபீரியாவின் தீபகற்ப பகுதியான யாமல் ரஷ்யா மற்றும் சைபீரியாவின் எல்லையாக அமைந்துள்ளது. இயற்கை மற்றும் எரிவாயு அதிகம் உள்ள நிலப்பரப்பு கொண்ட இந்த பகுதியே உலகின் கடைசி பகுதி என்றும் சமீப காலமாக அழைக்கப்பட்டு வருகிறது. ஏனெனில் இங்கு கடந்த சில தினங்களுக்கும் முன்னர் 260 மீற்றர் அகலத்துடன் மிகப்பெரிய ராட்சத பள்ளம் ஒன்று தோன்றியுள்ளது. ஆனால் இதன் ஆழம் குறித்து சரியாக தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய வான் படைத்தளபதி திருமலை வருகை

(ஸ்ரீ)

இந்திய வான்படையின் பிரதானிகளுள் ஒருவரான ஏர் சீப் மார்சல் அருப் ராஹா இலங்கைக்கு மேற்கொண்டுள்ள பயணத்தின் போது சீனன்குடா வான்படைத்தளத்திற்கும் வருகை தந்திருந்தார்.


சீனப் பிரதிநிதிகள் சீனன்குடா வான்படைத்தளத்திற்கு வந்து சென்றதன் பின் அவசர அவசரமாக இந்திய வான்படைத்தளபதிகளில் ஒருவரான இவர் இலங்கைக்கு வருகை தந்திருப்பதுடன் சீனன் குடாத்தளத்திற்கும் வந்து சென்றிருப்பது இந்திய இராசதந்திர நகர்வொன்றின் வருகையாகவே பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்திய வான்படைக்குச் சொந்தமான விசேட வானூர்தியிலேயே அவர் இலங்கைக்கு வந்திருந்தார்.

இலங்கையில் சனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் போன்றவர்களையும் அவர் சந்தத்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

சீனன்குடா வான்படைத்தளத்திற்கு....

13



(படங்கள் கதிரவன்)

# கணிதம் இன்றி கல்வியைத் தொடரலாம்

1+1=3

க.பொ.த சாதாரண தரத்தில் கணித பாடத்தில் சித்தி பெறாத மாணவர்களும் உயர்தரத்தைத் தொடர அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை ஆராய்ந்த அமைச்சரவை இதற்கான அனுமதியை அளித்துள்ளது.

இவ்வனுமதிக்கமைய கணித பாடத்தில் தேறாத மாணவர்கள் தமது உயர்கல்வியைத் தொடரலாம். ஆனால் அவ்விரண்டாண்டுக்குள் கணித பாடத்தில் சித்தியடைந்தால் மட்டுமே உயர்தரப் பரீட்சைக குத் தோற்ற முடியும் எனத் தெரிகின்றது.

# சுதந்திரக் கட்சிக்குப் பின்னால் செல்ல வேண்டாம்



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டாலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இணையவில்லை என ஜனாதிபதியின் ஆலோசகரும், கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

எமது மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்காகவே நாங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பங்காளராக செயற்படுகின்றோம்.

இந்த விடயத்தில் மக்கள் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார்

செங்கலடி பிரதேச செயலாளர் இடமாற்றத்துக்கெதிராக கடந்த திங்கட்

13

# இந்துமுறைப்படி ரஸ்ய இணை திருமணம்



பாசிக்குடா கடற்கரைக்கு உல்லாசப் பயணிகளாக வருகை தந்த இரஸ்ய நாட்டைச்சேர்ந்த இணையொன்று இந்து முறைப்படி திருமண பந்தத்தில் இணைந்துள்ளது.


இரஸ்ய நாட்டவர்களான ஓல்ஹா யுரெவ்னா மற்றும் அவரது காதலி இந்துஹா ஹொரிச்சி ஆகிய இருவருமே இந்து முறைப்படி விவாக பந்தத்தில் இணைந்துள்ளனர்.

இவர்களுக்கான விவாகப் பதிவை வாழைச்சேனையின் விவாகப் பதிவாளர் நடத்தி வைத்துள்ளார்.

(த.வி)




# "எங்களைச் சுட்டுக்கொல்லுங்கள்"



மரண தண்டனை விதிக்கப்பட்ட உக்ரேனியத் தம்பதியினர் தம்மை உடனடியாகச் சுட்டுக் கொல்லும்படி நீதிமன்றுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

நீதிமன்றத்தால் கொலைக் குற்றவாளிகளாக உறுதிப்படுத்தப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட இத் தம்பதியினரே உடனடி மரண தண்டனைக்கான கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இரட்டைக் கொலை, மற்றும் கொலை முயற்சி ஆகியவற்றுக்காக இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. (எல்.சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org